


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு.**

**பொருள் :** தனக்குப் பொருள் வரும் வழிகளை உண்டாக்குவதிலும், பொருளைச் சேர்த்தலிலும், பாதுகாத்தலிலும், அதனை நல் வழியிற் செலவிடுதலிலும் வல்லவன் அரசனாவான். (385)

**காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல(ன்) அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்.**

**பொருள் :** அரசன், குறைகளைத் தெரிவிக்கவரும் குடிகளுக்குக் காண்பதற்கு எளியவனாயும், கடுஞ்சொல்லில்லாதவனுமாயின் அவ்வரசனது இராச்சியத்தை உலகத்தவர் உயர்வாகக் கூறுவர். (386)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*



## ஒன்றே தெய்வம் ஒன்றே உலகம்

உலக முவக்கவும் உன்மனங் களிக்கவும்
கழறும் வாசகங் கருத்தி லிருத்துக
ஒன்றே தெய்வ மொன்றே யுலகம்
நன்றே யென்றும் நாடிப் புரிவாய்
நீசடப் பொருளல நிறைதரு சித்து
பேச வரிதுன் பெருமையெவ ராலும்
ஆதலா லுன்னை யாங்கி சுடாது
காதல்சேர் காற்றும் உலர்த்தா கவலல்
மாதிரந் தானும் வருத்த முடியாது
ஓதிடு மப்புவுங் குளிரச்செய் யாதுனை
ஈறிலாப் பொருணீ யெள்ளள வேனும்
மாறிலா மகிழ்ச்சி மனத்திடைக் கொள்வாய்
சாதி சமயம் யாவுமுனக் கில்லை
நீதி யொன்றை நெஞ்சிடை வைத்திடு
உபாதி செய்யும் புலன்வழி யுறாதே
அபாய மொன்று மென்று முனக்கிலை
செய்ய வேண்டிய செவ்வனே செய்வாய்
உய்ந்தாய் முன்னர் யுலகமுன் கைவசம்
சந்தேக மில்லைச் சாற்றினன் கேணீ
சற்குரு உன்துணை சாட்சிநீ யாவாய்
அற்புத னடியிணை யென்றும் வாழ்கவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு - 3 சுடர் - 315

**2024 பொருளடக்கம் பங்குனி**


| | | |
|---|---|---|
| சிவபரத்துவம் | கு. சோமசுந்தரம் | 01 - 03 |
| மனித மனமே மூலகாரணம் | திருமதி S.K. சிந்து | 04 - 05 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 06 - 09 |
| மன அமைதியைப் பெற... | செல்வி சரவணமுத்து | 10 - 12 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 13 - 14 |
| திருப்புகழ் | முருகவே பரமநாதன் | 15 - 19 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 20 - 23 |
| தம்மை மதியாத முனிவர்கள்... | திருமதி பொ. திலகவதி | 24 - 25 |
| சித்தர் பூமி | கு. சிவபாலராஜா | 26 - 29 |
| கங்கை | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 30 - 31 |
| குருபக்தி | R.V. கந்தசாமி | 32 - 34 |
| மல்லாகம் நீலியம்பனைப்... | ச. சஜீலன் | 35 - 38 |
| இறைவனைப் பக்திபூர்வமாக... | பு. கதிரித்தம்பி | 39 - 40 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் மாசி மாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

மாசி மாத ஞானச்சுடர் மலர் வெளியீட்டுரைக்குரிய அன்பர் வராத காரணத்தால் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளே மேற்கொண்டிருந்தார்.

அவர் தனது உரையின்மூலம் ஆச்சிரமம் ஆற்றும் பல பணிகள் பற்றியும் மற்றும் ஞானச்சுடர் வெளியீடு செய்வதன் தன்மை பற்றியும் சபையில் உள்ள அடியார்களுக்கு விளக்கிக் கூறியதோடு, வெளியீடு தொடங்கி 314 மாத காலம் தொடராக வெளிவருவது என்பது ஒரு சாதனையாகவே கருதவேண்டியுள்ளது. இச் சாதனைக்கு மூல காரணமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி வேலவனும் வாசகர்களும்தான் காரணம் என்று கூறி தனது வெளியீட்டுரையை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

மாசி மாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள் மேற்கொண்டார்கள்.

இம் மலருக்குரிய மதிப்பீட்டுரை காரணமாக பல வருடங்களாக இம் மலர் வெளியீட்டில் பங்குபற்றுவது சந்நிதி வேலவனது பெருங்கருணை என்றே கூறவேண்டும் தொடராக இம் மலர் வெளிவரும் காரணத்தால் பலவிதமான கருத்துக்களுடன் கூடிய கட்டுரைகளைக் காணக்கூடியதாக உள்ளது. ஒவ்வொரு விதமான வகையில் கட்டுரைகள் வெளிவந்தாலும் அதன் தன்மை குறையாது எமை ஈடேற்றும் வகையில் ஏதோ ஒரு கருத்து பொதிந்திருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. ஆரம்ப காலம் தொடக்கம் இம் மலரின் வளர்ச்சி மேம்பாடு அடைந்து வருவதை காலத்துக்குக் காலம் எம்மால் உணரக்கூடியதாக இருக்கின்றது. அவ்வகையில் இன்று வெளியீடு செய்யப்படும் 314ஆவது மலரில்கூட பலவித கருத்துக்களுடன் கூடிய கட்டுரைகள் வெளி வந்திருக்கின்றன. அதில் ஒரு சில கட்டுரைகளின் தன்மைபற்றி சபையில் உள்ள அடியவர்களுக்கு விளக்கிக் கூறியதோடு வருடா வருடம் இடம்பெறும் ஞானச்சுடர் மலருக்குரிய வாசகர் போட்டியினை நடாத்தி அதில் தகுதியானவர்களை தெரிவு செய்து பரிசில்கள் வழங்குவதும் இம் மலர் வளர்ச்சிக்கு பெரிதும் துணை நிற்கின்றது என்று கூறியதோடு வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

வாழ்க்கைச் சூழலும் மரபுவழி தன்மையும் ஒருவனுடைய ஆளுமை உருவாக்கத்திற்கும் அவனுடைய வாழ்க்கை மேம்பாட்டிற்கும் மிக முக்கியமான காரணங்களாக அமைகின்றன என்பது ஒரு பொதுவான கருத்து. நல்ல சூழலும் மரபுவழிப் பண்பும் உதவியாக அமையாதபோதுகூட ஒருவனுடைய சரியான சிந்தனைப்போக்கு, அவனுடைய ஆளுமையை உயர்த்தியதோடு வாழ்க்கையையும் மேம்படுத்தும் இந்த உண்மை எண்ணம்போல் இருப்பாய் என்னும் முதுமொழியின் மூலம் உணரலாம். நல்ல சூழலும் தகுதியான மரபுவழிப் பண்பும் ஒருசேர அமைந்துவிட்டால் நல்லதுதான். சிலபேருக்கு நல்ல சூழல் இருந்தும் நல்ல மரபுவழிப் பண்பு இல்லாமல் போகலாம். வேறு சிலருக்கு நல்ல மரபுவழிப் பண்பு இருந்து நல்ல சூழல் அமையாமல் போகலாம்.

இப்படி ஒன்றிருந்து ஒன்று இல்லாத நிலையில் ஒருவனுடைய வாழ்க்கை சிறப்படையுமா சீரழியுமா என்பதை முன்கூட்டிச் சொல்லமுடியாது. எப்படிப்பட்ட சூழலிலும் தன்னிலையில் இருந்து தாழாமல் தன் ஆளுமையை உயர்த்தி தன் வாழ்க்கையையும் மேம்படுத்திக்கொள்ள நல்ல வழி இல்லாமல் இல்லை. நம் ஒவ்வொருவருடைய மனதிலும் நல்ல இயல்புகளும் தீய இயல்புகளும் உண்டு. தீய இயல்புகள் நம்முடைய மனதில் இல்லை என்றால் தீமைகளைப் புரிந்து கொள்ளவே முடியாது. இவ்விரு இயல்புகளுக்கும் ஆட்படுபவரை நல்லவர் தீயவர் என்கிறோம்.

நல்ல எண்ணங்கள் தோன்றும்போது முடிந்தால் அவற்றை உடனே செயற்படுத்திவிட வேண்டும். தீய எண்ணங்கள் தோன்றும்போது உடனே அவற்றை செயற்படுத்தாமல் தள்ளிப்போடப் பழகிக்கொண்டால் கூட தீய எண்ணங்கள் நம்மை ஆட்படுத்த முடியாது. மனம் போற போக்கில் போகாமல் எது சரி எது தவறு என்பதையும் நல்லது எது தீயது எது என்பதையும் பகுத்தறிந்து உணர்ந்துகொண்டு அதன் வழி நடப்பதே நன்று.

ஒவ்வொரு வினாடியும் விழிப்பாக இருந்து நல் மனத்தின் ஆட்சிக்கு நாம் இடம்கொடுத்து பழகிவிட்டால் நம்முடைய ஆளுமையும் உயர்வும் வாழ்வும் மேம்படும். இதனை நாமும் எமது வாழ்வில் கடைப்பிடித்து நம்மை சார்ந்த சமுகத்தை மேம்படுத்துவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவில் வந்தவள் யாரெனக் கேட்டேன்

கனவில் வருவாள் ஒருத்தி - அவள்
காணா உலகில் முகம் சிரிப்பாள்
நனவினில் நேரே நடந்திடுவாள் - சிலம்பின்
நாதம் கேட்டிடும் முகம் காட்டாள்.

காற்றினில் மிதந்து வந்திடுவாள் - வானில்
பறந்து காசினி முழுவதும் சுற்றிடுவாள்
ஆறு மலை முகட்டினிலே சிலம்பு - ஒலிக்க
அரிய நடனம் புரிந்திடுவாள்.

கைகள் நீட்டி வான் தொடுவாள் - அவள்
மூன்றடியாலே கடல் கடப்பாள்
கண் சிமிட்டி மருட்டிடுவாள் - இந்த
மானிலம் முழுக்க மயங்க வைப்பாள்.

மனதினில் வீடு கட்டிடுவாள் - அதில்
மக்களைக் குடியிருக்க வைத்திடுவாள்
நிலவினை எடுத்து வந்திடுவாள் - அதில்
வெளிச்சம் தந்திட குடிவைப்பாள்.

புத்தகம் கையில் வைத்திருப்பாள் - அதில்
ஏடும் எழுத்தும் கொண்டிருப்பாள்
வித்தகம் பேசி மயக்கிடுவாள் - மனம்
ஏங்கிட மெல்ல அணைத்திடுவாள்.

அணைக்க நினைத்து கண்விழித்தால் - மென்
சிரிப்புடன் காற்றில் மறைந்திடுவாள்
மணக்கும் மலர் தனைச் சூடச் சொன்னால் - மலர்
சூடாமல் புன்னகை சிந்திடுவாள்.

சிரிப்பாள் குழைவாள் நடமிடுவாள் - உடன்
சேர்ந்தே சிந்தனை வயப்படுவாள்
மூடிய கைகளை திறந்திடுவாள் - அதில்
ஏது மில்லை என்றிடுவாள்.

பட்டுச் சேலை தானணிவாள் - பதக்கம்
பூக்கள் சூடிடுவாள் தன் புன்னகை
என்னும் நகை சிந்தி - உடன்
மாய உலகம் சென்றிடுவாள்.

யாரவள் என்றே தெரிந்திலேன் - அவள்
பேசும் மொழியும் அறிந்திலேன்
பேரது யானும் கேட்டிலேன் - அவளது
முகமும் யானும் பார்த்திலேன்.

யாரது என்று கேட்கவே - முகம்
புன்னகை தந்தே பேசினாள் அவள்
பேரது தன்னை கேட்கவே தாயே என்றாள். அறிந்தேன்
அது என் பாராளும் சக்தி அவள்என்றே.

- திரு பொ. பாலேஸ்வரன் அவர்கள் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**இ. சங்கரலிங்கம்**
(அம்மன் பல்பொருள் வாணிபம், ஊரெழு கிழக்கு)

**இராமசாமி திருச்செல்வம்**
(தலைவர், பர்வபத்தினி அம்பாள் தேவஸ்தானம்)

**அ. வரதராசா**
(வரியப்புலம் வீதி, சுண்ணாகம்)

**வே. நடராசா**
(தும்பளை மேற்கு)

**சி. கிருஷ்ணபிள்ளை J.P.**
(ஆவரங்கால்)

**பொதுமுகாமையாளர்**
(வலி. கிழக்கு வடபகுதி ப.நோ.கூ. சங்கம், அச்சுவேலி)

**பொதுமுகாமையாளர்**
(பனை, தென்னை வள அபிவிருத்தி கூ. சங்கம், அச்சுவேலி)

**சி. குமாரலிங்கம்**
(இளைப்பாறிய வங்கியாளர், யாழ்ப்பாணம்)

**செ.க. செல்வநாயகம்**
(செல்வா ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)

**திருமதி சு. செல்வக்குமார்**
(மாநகரசபை, யாழ்ப்பாணம்)

**அதிபர்**
(சிதம்பராக்கல்லூரி, வல்வெட்டித்துறை)

**சு. சோமாஸ்கந்தமூர்த்தி**
(சித்தங்கேணி)

**யோ. சிவஉமாகரன்**
(உயர் பட்டப்படிப்புப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

**திருமதி தயாநிதி பாலசுந்தரம்**
(தெல்லிப்பழை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ந. கணேஸ்வரமூர்த்தி**
(கரவெட்டி)
**ச. தங்கராசா J.P.**
(இளை. அதிபர், நீர்வேலி)
**க. மணியன்**
(புத்தூர்)
**வ. துரைராசா**
(ஒஸ்காவீதி, உடும்பராய் தெற்கு)
**சி. தவலிங்கம்**
(இளை. இலங்கை வங்கி முகாமையாளர், பருத்தித்துறை)
**மு. குமரதாசன்**
(வல்வெட்டித்துறை)
**K. கேதீஸ்வரநாதன்**
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
**சு. மகேஸ்வரன்**
(மாரியம்மன் மோட்டோர்ஸ், கோப்பாய்)
**தம்பிப்பிள்ளை குணரட்ணம்**
(சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி)
**S. திருவாஞ்சீஸ்வரன்**
(V.S.K. மானிப்பாய்)
**த. விவேகானந்தராசா**
(டச்றோட், சித்தங்கேணி)
**அ. கோணேஸ்கரன்**
(தில்லையம்பதி, கோண்டாவில்)
**இ. சந்திரசேகரன்**
(மாசியப்புலம் வீதி, ஏழாலை)
**ஜெ. ஜெயப்பிரதாப்**
(சாவகச்சேரி)
**சி. அழகேசன்**
(வட்டுவினி அம்மன் கோவிலடி, இணுவில்)
**க. தர்மநாயகம்**
(மஞ்சத்தடி, இணுவில்)
**பொ. ஞானப்பிரகாசம்**
(கரணவாய் தெற்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரிமையாளர்**
(கண்ணாடி களஞ்சியம், நெல்லியடி)
**இ. வீரசிங்கக்குருக்கள்**
(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)
**அதிபர்**
(கம்பர்மலை அ.த.க. பாடசாலை)
**அதிபர்**
(உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி)
**திருமதி சி. தருமலிங்கம்**
(இமையாணன், உடுப்பிட்டி)
**கனகலிங்கம் சந்திரவாசன்**
(நீர்வேலி)
**கி. அருள்நாதர்**
(பாலாவி தெரு, பொலிகண்டி)
**சறோஜினிதேவி மாணிக்கராசா**
(வறாத்துப்பளை, பருத்தித்துறை)
**சி. உமாமகேசன்**
(கொடிகாமம்)
**மார்க்கண்டு முத்துப்பிள்ளை**
(அத்தியடி, யாழ்ப்பாணம்)
**க. விக்னேஸ்வரராஜா**
(புலோலி)
**லலிதா சண்முகலிங்கம்**
(திருமகள் வீதி, அரியாலை)
**சி. விவேகானந்தம்**
(பருத்தித்துறை)
**சி. நாகரூபன்**
(கரணவாய்)
**K. பிரதீபன்**
(யாழ்ப்பாணம்)
**ஐ. காளிங்கநடனம்**
(கொக்குவில்)
**கு. ரங்கநாதன்**
(இணுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க. ஜெயபாலகணேசன்**
(சிறுப்பிட்டி தெற்கு)
**Dr. அ. செந்தில்குமரன்**
(பல் வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, மந்திகை)
**இ. பாஸ்கரன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)
**த. சிவானந்தமூர்த்தி**
(புத்தூர்)
**சி. பத்மகுமார்**
(இணுவில் தெற்கு)
**அதிபர்**
(இமையாணன் அ.த.க. பாடசாலை)
**பா. சுதாகரன்**
(கற்பகப் பிள்ளையார் ஸ்ரோர்ஸ், உடும்பராய்)
**வ. கெங்கநாதன்**
(நீர்வேலி)
**P. நடராசா**
(கல்லடி ஒழுங்கை, சாவகச்சேரி)
**சி. சிவகுமார்**
(ஆவரங்கால்)
**S. முரளிதரன்**
(அச்சுவேலி)
**V. கருணாகரன்**
(சங்கானை)
**ச. சிவலிங்கம்**
(மானிப்பாய்)
**சண்முகம் தனலட்சுமி**
(கரணவாய்)
**வ. இரத்தினசிங்கம்**
(கம்பர்மலை)
**க. வைத்தியநாதன்**
(ஏழாலை)
**சி. கணபதிப்பிள்ளை**
(கரவெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபரத்துவம்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவசமயம்; உலகில் மிகவும் தொன்மையானது. சைவம் எங்கள் சமயம்; சைவ சித்தாந்தம் எமது சமய தத்துவம்; சைவ நெறி எங்கள் வாழ்க்கை நெறி. இம் மூன்று அங்கங்களையும் ஒருங்கே கொண்டு முழுமைத்துவம் பெற்ற உலகின் மூத்த சமயமாக சைவம் விளங்குகின்றது.

"சைவம் சிவனுடன் சம்பந்தமாவது
சைவம் தனையறிந்தே சிவம் சாருதல்
சைவம் சிவம் தன்னைச் சாராமல் நீங்குதல்
சைவம் சிவானந்தம் சாயுச்சியமே"

-திருமந்திரம் 1512.

சைவம் சிவம் சம்பந்தப்பட்டது. சிவம் அன்பு சம்பந்தமுடையது. "அன்பே சிவம்" எனத் திருமூலர் அறிவிக்கிறார். தமிழ் மக்கள் காலங்காலமாகப் பின்பற்றி வருகின்ற சமயம் சைவம். தமிழர், தென்னாட்டவர். அதனால் "தென்னாடுடைய சிவன்" எனச் சிவ பரம்பொருளை விளித்துப்போற்றி அச் சிவனார் உலகின் எந்நாட்டவர்க்கும் இறைவன் என்னும் பேருண்மையைத் தெளிந்து, உலகத்தவர்க்குச் சிவபரத்துவத்தை உணர்த்தி, உலகளாவிய நிலையில் சைவத்தை நிலைநாட்டியவர் மாணிக்கவாசகர்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

சிவபரத்துவத்தை விளங்கிக்கொள்ள, இவ்விரண்டு மணி வாசகங்களும் போதுமானவை.

சிவம் அதுவே பரம்பொருள்; மெய்ப்பொருள்; பெரும் பொருள்; என்றும் உள்ள பொருள்; எங்கும் நிறைந்த பொருள்; உலகிலுள்ள எல்லா உயிருள்ள, உயிரற்ற பொருள் களுடன் ஒன்றாய், உடனாய், வேறாய் உள்ள இறைபொருள்.

சத்தியம் (உண்மை); சிவம் (நன்மை); சுந்தரம் (அழகு) எனும் மூன்றும் நிறைந்த முழுப்பொருள் சிவம்.

சத்து, சித்து ஆனந்தம் ஆக உள்ள நிறைபொருள், சிவபரம் பொருள் சச்சிதானந்தம் என ஒரு சொல்லால் சிவம் அழைக்கப்படுகிறது.

மனம், மொழி, மெய் என்பவற்றிற்கு எட்டாத பெரும் பொருள் சிவம். விஞ்ஞானத்தினால் ஆய்வுசெய்து சுட்டி அறியமுடியாத மெய்ப்பொருள் சிவம்.

சிவபரத்துவம்; சிற்றறிவும் சிறு தொழிலும் கொண்ட மனிதர்களால் அளந்தறிவதற்கு அரியது. ஆயினும் அன்பர்களின் பக்தி வலையில் அகப்படும் பெருநிதி சிவநிதி ஆகும்.

*மற்றவர்களைச் சந்தோஷப்படுத்துபவனே உண்மையில் சந்தோஷப்படுவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பே சிவம்**

பக்தி என்ற பதம் வடமொழிச்சொல். அதற்கு இணையான தமிழ்ச்சொல் அன்பு. "பக்தி வலையில் படுவோன் காண்க" என்கிறது திருவாசகம்.

சிவபரத்துவம் என்பது அன்பின் பரத்துவம். "அன்பினில் விளைந்த ஆரமுதே" என்கிறார் மணிவாசகப் பெருமான்.

அன்பெனும் பிடியுள் அகப்படு மலையே
அன்பெனுங் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குள் படுபரம் பொருளே
அன்பெனுங் கரத்தமர் அமுதே
அன்பெனுங் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புரு வாம் பர சிவமே.

சிவபெருமான் கருணைக்கடல்; அருள் நிறைந்தவர், சகல உயிர்களிலும் எவ்வித வேறுபாடுகளுமின்றி அன்பு, அருள், கருணை கொண்டிருத்தலினால் வேதம், ஆகமங்கள் மற்றும் திருமுறைகள் யாவும், சிவபெருமானைச் சகலசீவதயாபரன் என்றும் "அன்பினில் விளைந்த ஆரமுது" என்றும்; "ஒன்று அவன்தானே இரண்டு அவன் இன்னருள்" என்றும் ஏற்றிப் போற்றுகின்றன. "பால் நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப்" பரிவு கருணையுள்ளம் கொண்டவர் என்றும்; "தாயிற் சிறந்த தயாவான தத்துவன் என்றும்; "பேராது நின்ற பெருங்கருணைப் பேராறு" எனவும் மாணிக்கவாசகர் சிவபெருமானின் அன்பு, அருள், கருணை, தயை என்பவற்றைப் போற்றித் துதிக்கின்றமை நோக்கற்பாலது.

வான் ஆகி மண் ஆகி வளி ஆகி ஒளி ஆகி
ஊன் ஆகி உயிர் ஆகி உண்மையும் ஆய் இன்மையும் ஆய்
கோன் ஆகி யான் எனது என்று அவர் அவரைக் கூத்தாட்டு
வான் ஆகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

-மாணிக்கவாசகர்.

இணங்கி நின்றான் எங்கும் ஆகி நின்றானும்
பிணங்கி நின்றான் பின்முன் ஆகி நின்றானும்
உணங்கி நின்றான் அமராபதி நாதன்
வணங்கி நின்றார்க்கே வழித்துணை ஆமே.

-திருமூலர்.

அனைத்து அண்டசராசரங்களுடனும் சிவம் இணங்கியும் இசைந்தும் நிற்கின்றது. சர்வ பிரபஞ்சங்களிலும் காட்சி கொடுக்கின்றது. சர்வ உயிரினங்களுடனும் பின்னிப் பிணைந்து நிற்கின்றது. காலம் எல்லாம் கடந்த சிவபரம்பொருள், எமக்கு எதிர்காலத்திலும் காட்சி தரவல்லது. கடந்த காலத்திலும் காட்சி கொடுத்தது. சிவம் எம்மைப்போலக் காலப் பிரமாணத்திற்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுவதில்லை. அது; கால, தேச வர்த்தமானங்களைக் கடந்தது. சிவபரத்துவம் திருமூலரால் இவ்வாறு விவரிக்கப்படுகிறது.

"எவ்வுயிரும் நீங்காது உறையும் இறைவன் என்று
எவ்வுயிர்க்கும் அன்பாயிரு"

-திருவருட்பா.

எவ்வுயிர்க்கும் அன்பாயிருப்பவர்கள்; உலகின் அனைத்துப் படைப்புக்களுடனும் அன்பும் கருணையும் பேணுபவர்களே; உண்மைச் சிவபக்தர்கள்; சைவ சமயிகள் ஆவர்.

"ஈசனுக்கு அன்பிலார் அடியவர்க் கன்பிலார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்"

-சிவஞான சித்தியார்.

**சந்நிதியானே**
**இனியாவது திருந்த அருள் தா முருகா!**

எத்தனை கோடி பணமிருந்தாலும்
எனக்கு நிம்மதி இல்லை முருகா!
எல்லோரிலும் நானே பெரியவனென்று
எடுத்தெறிந்து கதைத்தேனே முருகா!

சொத்தினை எல்லாம் கண்கடை தெரியாமல்
சொன்ன விலையேற்றி விற்றேன் முருகா!
சோகமே வாழ்வில் குடிகொண்டது முருகா
சோர்ந்து போய்விட்டேன் முருகா!

அத்தனை திருவிளையாட்டையும் புரிந்தேன்
ஆசையோ அடங்கவில்லை,
அடுக்கடுக்காய் பதவிகளைப் பறித்துக்கொண்டேன்
அநியாயம் என்று உணரவேயில்லை முருகா!

இத்தனை தெரிந்தும் மேடையை நான் விடவில்லை,
இருப்பவர்களுக்கு இடமளிப்பாய் முருகா!
இலங்கையின் தோல்விக்கு, இதுவே காரணம்
இனியாவது நாம் திருந்த அருள்தா முருகா!

-கே.எஸ். சிவஞானராஜா-

*நல்லெண்ணம் கொள்வது இறைவழிபாட்டின் ஓர் அங்கமாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மனமே மூலகாரணம்

– திருமதி S.K. சிந்து அவர்கள் –

நாம் இன்றைய காலகட்டத்தையும், சூழ்நிலைத் தாக்கங்களையும் மையமாக வைத்து நமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

ஏனெனில் இயற்கையின் சீற்றமும், செயற்கையின் தாக்கமும் இன்று மிக வேகமாக மனிதனைத் தாக்கிக்கொண்டிருக்கின்றன. இவற்றிலிருந்து மனிதனை விடுவிப்பதற்காக விஞ்ஞான உலகம் புதிய ஆய்வுகளையும் கண்டுபிடிப்புக்களையும் மிக வேகமாக மேற்கொண்டு வருகின்றது. ஆனாலும் இயற்கையின் சீற்றத்தை மனிதனால் எதிர்கொள்ள முடியவில்லை. தினமும் பூகம்பம், சுனாமி, சூறாவளி, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு.... போன்ற பாரிய அனர்த் தங்களைச் சந்திக்கின்றோம். இவை மாத்திரமின்றி வாகன விபத்து, தீ விபத்து, குண்டுவெடிப்பு, கொள்ளை, துப்பாக்கிச்சண்டை, வாள்வெட்டு... என எத்தனையோ அனர்த்தங்கள் தினம் தினம் நடைபெறுகின்றன.

இத்தனை அனர்த்தங்களும் மனித வாழ்க்கையைச் சின்னாபின்னமாக்குகின்றன. எனவே இவைபற்றி ஒவ்வொரு மனிதனும் சிந்திக்க வேண்டும். ஏனெனில் எண்ணங்களின் பிரதிபலிப்பே நமது வாழ்க்கை. மனிதனின் மனத்திலே எழுகின்ற எண்ணங்கள் தாம் இவ்வுலகில் நடக்கின்ற நன்மைக்கும் தீமைக்கும் காரணமாகின்றன. மனித மனத்தினைத் தீயவழிக்கு இட்டுச் செல்கின்ற தன்மை கலியுகத்தைச் சார்ந்தது. ஆகவேதான் உலகம் முழுவதும் கொலை, கொள்ளை, ஒழுக்கக்கேடு, கற்பழிப்பு, குரோதம், இனவாதம் என்பன நிறைந்து காணப்படுகின்றன. அன்பு, கருணை, விசுவாசம், நேர்மை, நம்பிக்கை, உண்மை என்பன பெருமளவிற் குறைந்துவிட்டன. உலகமெங்கும் மனிதப் பண்புகள் குறைந்து மிருகப் பண்புகள் அதிகரித்து வருகின்றன.

இதற்கான அடிப்படைக் காரணங்கள் மனிதனால் உருவாக்கப்பட்டவையே. அதாவது அன்றைய காலகட்டத்தில் நம் முன்னோர்கள் கண்ணாற் காணும் யாவற்றையும் வழிபட்டனர். பூமி, வாயு, அக்கினி, வருணன் முதலான இயற்கைத் தெய்வங்களை வழிபட்டனர். அதனால் அவற்றின் பலாபலன்கள் மனிதனுக்குக் கிடைத்தன. ஆனால் இன்று இயற்கையை வழிபடுகின்ற மரபு மனிதனிடம் மறைந்துவிட்டது. நன்றி கெட்டவர்களாக இயற்கைச் சமநிலையைக் குழப்புகின்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். ஒரு சில பழமைவாதிகள் மட்டும் இயற்கையை வழிபடுகின்றனர்.

இனிய இசை பக்திப் பரவசமான பாடல்கள், ஜெபம், தியானம் என்பவற்றால் மனிதனின் உடலின் அதிர்வெண் நிலையை மாற்றமுடியும். மனித உடலில் மாற்றத்தை ஏற்படுத்தினால் இயற்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இங்கு ஒலி முக்கிய இடத்தைப் பெறுகின்றது. "ஓம்" என்னும் பிரணவ ஒலியில் பிரபஞ்சத்தின் தோற்றமும்

*ஆலோசனைக்குப் பின்னரே எல்லாச் செயல்களையும் தொடங்க வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கமும் நிகழ்கின்றன. ஆனால் இன்றைய உலகில் ஒலியின் அதிர்வு தீமைக்கு வித்திடுவதாக அமைந்துள்ளது. இன்று கர்நாடக இசை குறைந்துவிட்டது. தாலாட்டுப் பாடல் கேட்டுக் குழந்தைகள் உறங்கிய காலம் மலையேறிவிட்டது. இவற்றிற்குப் பதிலாக மனிதத்திற்கும் ஒழுக்கத்திற்கும் ஒத்துவராத டப்பாப் பாடல்கள் எங்கும் நிரம்பி வழிகின்றன.

இன்றைய இளைஞர் சமுதாயம் இவ் இசை கேட்டு சிலிர்த்தெழுகின்றது. மனித மனம் அதில் இலயப்படுகின்றது. உடுக்கடிக்கும்போது மனிதன் உருக்கொண்டு ஆடுவதுபோல் இன்றைய இசையினால் ஏற்படும் ஒலி அதிர்வெண்கள் இயற்கையின் சமநிலையைக் குழப்புகின்றன. இதனாலேயே மனிதனை இயற்கை அனர்த்தங்கள் தாக்குகின்றன. எனவே இயற்கைச் சமநிலையைப் பேணுவது ஒவ்வொரு மனிதனதும் தலையாய கடமை.

இன்றைய இளைஞர்களை நாளைய தலைவர்களாக உருவாக்குகின்ற இடம் பாடசாலை. ஆகவே பாடசாலைகளில் பரீட்சைக்காக மட்டும் கற்பிக்காது மனித விழுமியங்களைக் கற்பிக்கவேண்டியது அவசியமாகும். மனத்தில் சத்தியம், தர்மம், அமைதி, அகிம்சை ஆகிய மனித விழுமியங்களைப் பதியவைக்க வேண்டும். அதனாற்றான் சிறந்த சமுதாயம் ஒன்றை உருவாக்க முடியும்.

இன்று கலை எனும் பெயரில் சினிமாப் படங்களும், சின்னத்திரையும்தான் முன்னிலையில் நிற்கின்றன. இதனால் படுமோசமான ஆபாசக் காட்சிகளும், பாடல்களும் மனித மனத்தில் இடம்பிடித்துள்ளன. தரக்குறைவான எண்ணங்களால் மனித மனம் நிரப்பப்பட்டுள்ளது. அதனால் சிறந்த நல்ல கலை உணர்வுகள், கற்பனைகள் அழிக்கப்பட்டுவிட்டன.

எனவே இவற்றிலிருந்து மனித மனம் விடுபடவேண்டும். நல்ல கலையுணர்வுகள் வளர்க்கப்பட வேண்டும் பாடசாலைகள், சமய நிறுவனங்கள் மூலம் கலைகள் வளர்க்கப்பட வேண்டும். அப்போதுதான் ஓரளவாவது பண்பான சமுதாயத்தை உருவாக்கலாம். அந்த வகையில் இன்றைய இந்தக் காலகட்டத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை மனித மனத்தினைப் பண்படுத்தக்கூடிய வகையில் மேற்கொண்டுவரும் இத்தகைய பணி பாராட்டத்தக்கது.

நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை

என்பதுபோல நல்ல காரியங்கள் நடப்பதற்கு வித்தாக வாழ்கின்ற நல்ல மனிதர்கள் ஒரு சிலரால் ஓரளவாவது சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும். ஆகவே இன்று நாம் அனுபவிக்கின்ற துன்பங்களிற்கெல்லாம் மூலகாரணம் மனித மனமே. ஒவ்வொருவரும் தமது மனதைத் தூய்மைப்படுத்தினால் நல்வாழ்க்கையை அமைத்துக்கொள்ளலாம்.

---

*பணம் உங்கள் பிரச்சனையைத் தீர்க்காது. இதயத்தைக் கொண்டுதான் உன் பிரச்சனையைத் தீர்த்துக்கொள்ள முடியும். பணத்தாலல்ல, எத்தனை கொடுமையான செயல்கள் புரிய நேர்ந்தாலும், இறைவனைப்பற்றி ஆழ்ந்து சிந்தனை செய். மலைச் சிகரங்களின் மேல் எவ்வளவு பனி இருந்தாலும் சூரிய வெப்பத்தில் அது கரைந்துவிடும். பாவங்கள் மலைபோல் குவிந்தாலும், இறைவனருளால் அவை கரைந்துவிடும்.*

***மேன்மையை நாடிச் செல்பவனுக்கு சிறு குறைகளும் இருக்காது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

## அத்தியாயம் - 11

(தொடர்ச்சி...

## தியான யோகம்

-திரு பூ. சோதிநாதன் அவர்கள்-

### 21) கர்மா

கர்மா என்ற வார்த்தையில் இருந்து அது எப்போதும் எம்மைத் தளைப்படுத்தும் என்று நாம் பயப்படுகிறோம். அதேவேளை அதே கர்மாவிலுள்ள நல்ல பக்கத்தை நாம் மறந்து விடுகின்றோம். கர்மவிதியின் நடைமுறைக்கு அவ்விரு பக்கங்களுமே உண்டு. யோகத்தை எமது வாழ்வில் பயிற்சி செய்யும் முயற்சிகள் யாவும் வரவேற்கத்தக்கவையே. அதில் நாம் வெற்றி அடைவோமா அல்லது தோல்வி அடைவோமா என்பது வேறு விடயம். உண்மையில் கீதை பகரும் யோகம் வெற்றியோடு அல்லது தோல்வியோடு தொடர்புடையது அன்று. அது எமது வாழ்நாள் முழுவதும் நாம் கடைப்பிடிக்கும் மனப்பான்மையில் வேரூன்றி இருக்கும் விடயம் ஆகும். அதாவது அதனை எவ்வளவு விசுவாசத்தோடு நாம் மேற் கொள்கிறோம், அதற்குப் பின்னாலுள்ள நோக்கத்தில் நாம் எவ்வளவு நேர்மையாக இருக் கின்றோம் என்ற மனப்பான்மையிலேயே அது தங்கி உள்ளது. எமது முயற்சியிலுள்ள விசுவாசத்தையும் நேர்மையையுமே கடவுள் மதிப்பிடுகின்றார். ஒருவர் எதிர்பார்க்க வேண்டாததை எதிர்பார்க்கும் உள்நோக்குடைய வெற்றியை வைத்து அவர் அவரை மதிப்பிடுவதில்லை. முழுவதும் எங்களிலேயே அன்றி வெளியில் ஏதும் இல்லை. யோக இலக்கை அடையுமுன் உடலை நீக்கும் ஒருவர் நல்ல சாதகமான ஒரு சூழ்நிலையில் மறுபிறப்பெய்தி வந்து பிறக்கின்றார். அவர் தான் முற்பிறப்பில் செய்த சாதனைகளைத் தொடர்ந்து மேலும் தீவிர மாக மேற்கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையிலேயே மறுபிறவி எடுக்கின்றார். அவர் தனது சாதனைகளுக்கு இடையூறு இல்லாத தனக்குப் பொருத்தமான ஒரு சாதகமான சூழ்நிலையில் மீண்டும் வந்து பிறக்கின்றார். அவரது முற்பிறப்பு ஞாபகம் தனது சொந்த வழியிலேயே வேலை செய்கிறது. இந்த ஞாபகம் அவரது மனத்துக்கு வெளியாகத் தெரியாமலே செயற்படலாம்.

### 22) முற்பிறப்பு

எம்மில் பலருக்கும் முற்பிறப்புக்களின் ஞாபகம் இருப்பதில்லை. ஆனால் நாம் ஒவ்வொருவருமே ஏதோ ஒரு குறிக்கோளை நோக்கி உந்தப்பெறுவதாகவே உணர்கின்றோம். ஆனால் இந்த உந்துதலை நாம் எமது வெளி மனதின் மட்டத்தில் உணருவதில்லை. எமக்கு

எல்லா ஒழுக்க நெறிகளுக்கும் பணிவுதான் உறுதியான அடித்தளமாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே உள்ள இந்த ஆழ்மன ஆவல் எமது முற்பிறப்புச் சாதனைகளையும் அபிலாஷை களையும் தூண்டுகின்றது. மனம் தனது வெளிமட்டத்தில் அதனை வெளிப்படுத்தாவிடினும் அது ஆழ் மனதில் தொடர்ந்தும் இருந்துகொண்டே உள்ளது. எனவே முற்பிறப்பில் நிறைவேற்றி முடிக்காத அதே பயிற்சியின் திசையில் அது அவனை அந்த வகையில் பிறந்து இயங்க வைக்க உந்துகின்றது. அவனை அந்தப் பயிற்சிக்குத் தேவையான எல்லாம் கர்மவிதியின்படி அவனுக்கு வழங்கப்பெறுகின்றன. அந்த ஆசீர்வாதப் பலனின் காரணமாக அவன் தனது தற்போதைய பயிற்சியில் எதுவித நோவையும் உணரப்போவதில்லை. அந்த ஆசீர்வாதம் அவனது முந்திய பிறப்பில் செய்த நல்வினைகளினால் சேகரித்து வைத்துக் கர்மவிதியின்படி வழங்கப்பெறுகிறது. எனவே யோகத்தை மேற்கொள்ளும்போது நாம் எமது முயற்சிகளில் நேர்மையாகவும், விசுவாசமாகவும் இருக்கவேண்டி உள்ளது. அவ்வாறு செய்யப்பெறும் அந்த யோகம் தானே எங்களை நன்றாகக் கவனித்துக் கொள்ளுகின்றது. அது எங்களை ஒருபோதும் கைவிட்டுவிடுவதில்லை.

## 23) யோகம்

இந்த உலகில் நாம் சிந்தித்துப் பார்க்கக்கூடிய எல்லாத் தாய்மார்களைக் காட்டிலும் யோகம் எம்மை அதிகமாக நேசிக்கும் அன்னையாகும். இதனால் முற்பிறவியில் யோகப் பயிற்சியில் ஈடுபட்ட ஒருவர் யோகத்தை மேற்கொள்ளும் ஒரு குழந்தையாகவே மீண்டும் பிறக்கிறார் என்று பகவான் கூறுகிறார். இதனால் வாழ்வின் இலக்கைத் தேடும் ஒருவரது ஆன்மாவைக் காட்டிலும் சிறப்பான பெரிய விடயம் எதுதான் இருக்கமுடியும்? எனவே முயற்சி இழப்பு, அழிவு என்பன பற்றி யோகத்தை மேற்கொள்ளும் நாம் எவ்விதப் பயமும் கொள்ளத் தேவையில்லை. கடவுள் எல்லோரதும் நண்பனும் பாதுகாவலரும் ஆவார் என்று கூறிக் கீதையின் ஐந்தாம் அத்தியாயம் நிறைவுபெறுகிறது. எமது உண்மையான எல்லா நண்பர்களைக் காட்டிலும் கடவுள் மேலான ஒரேயொரு சிறந்த நண்பன் என்பதை நாம் உணரும்போது மட்டுமே மன அமைதியைப் பெறுவோம். நாம் எமக்கு உதவும்படி கடவுளிடம் கோரினால் அவர் எவ்வாறு எங்களை மறந்து கைவிட்டு விடமுடியும்? வெளிக்குத் தோற்றமளிப்பதைவிட உண்மை மிக ஆற்றல் வாய்ந்ததாக இருப்பதனால் நாம் அவரை மறக்கக்கூடுமாயினும் அவர் நம்மை மறக்கமுடிவதில்லை. உண்மைகளை நோக்கியதாக அன்றி நிழல்களை நோக்கியதாகவே எமது மனதின் இயக்கங்கள் இருப்பதனாலேயே எமக்கு இலக்கைவிட்டு நீங்கவேண்டிய திசை திருப்பங்கள் ஏற்படுகின்றன. ஆனால் எமது மனம் உண்மையை நோக்கி விசுவாசமாக இயங்கும்போது அந்த உண்மை பூரணமாக இல்லாவிடினும் தனது சொந்த வழியில் அதிசயமாகச் செயலாற்றிக்கொள்ளும். கடவுளின் வழிகள் யாவும் அதிசயமானவையே. கடவுளைப் பற்றிய எமது கருத்து எப்படி இருந்தபோதும் நாம் ஓரளவேனும் கடவுளை நோக்கி விசுவாசமாகப் பயிற்சி செய்தால் அது எமது வருங் கால வாழ்வில் பாதுகாவலாக இருக்கும். ஆனால் ஒரு குழந்தை போன்று நாம் இதய பூர்வமாகக் கடவுளிடம் விசுவாசமாய் இருக்கவேண்டும். அது எக்காலமும் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளும்.

*வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளை நிதானத்துடன் எடுத்துக்கொள்ள வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24) ஒளிக்கதிர்கள்

அவ்வாறான கடவுள் விசுவாசம் உள்ளவருக்கு இப்பிறப்பிலோ, மறுபிறப்பிலோ எவ்விதத் தொந்தரவும் இருக்காது. ஒருவர் தான் பாதாளத்திலேயே இருப்பதாக உணரும்போது மட்டும் ஆரம்பத்தில் கஷ்டங்கள் இருக்கும். ஆனால் பின்பு அவர் தனது முகத்திலே மேலான ஒளிக்கதிர்கள் வீசுவதைக் காண்பார். ஆரம்பத்தில்தான் எல்லாம் பிரச்சினையாகவும், கடினமாகவும், துன்பமாகவும் இருக்கும். ஒரு குறிப்பிட்ட காலத்தின்பின் ஆரம்பத்தில் மிகத் துன்பமாக இருந்தவை மாறி நல்லவையாகக் காணப்பெறும் என்று கீதை எமக்குக் கூறுகின்றது. அக்காலப் பகுதியின் பின் அவையே மிகப்பெரிய திருப்தியையும், மகிழ்ச்சியையும் தமது பலனாகத் தரும். ஒவ்வொருவகையான ஆன்மிகப் பயிற்சியின்போதும் யோகத்தில் வாழ்க்கைத் துன்பங்கள் தவிர்க்கமுடியாதனவே. நாம் தியானப் பயிற்சியை மேற்கொள்ளும்போது எமது ஆளுமைகளிலுள்ள குப்பை கூழங்களை அகற்றித் துப்பரவு செய்கிறோம். அச் செய்கை பல ஆண்டுகளாகத் துப்பரவு செய்யப்பெறாத சிலந்தி வலைகள் முதலானவை நிறைந்துள்ள அழுக்குகளை எமது அறையில் இருந்தும் கூட்டித் துப்பரவு செய்வதை ஒத்ததாகும். நாம் அறையிலுள்ள அழுக்குகளைக் கூட்டித் துப்பரவு செய்யும் வேளையில் தூசிகள் எழுந்து எமது கண்களை மறைப்பதை நாம் காண்போம். அது முன்பிருந்ததைவிட மிக மோசமாக இருப்பதுபோல எமக்குத் தோன்றலாம். ஆனால் முற்றாகக் கூட்டி முடித்துத் தூசிகள் போனபின் நாம் மகிழ்ச்சி அடைவோம்.

## 25) மாசிலனாதல்

யோகப்பயிற்சி செய்யும் காலத்தில் தோன்றும் கஷ்டங்கள், துன்பங்கள், நோவுகள், சந்தேகங்கள், தொந்தரவுகள் யாவும் பல பிறப்புக்களில் பல ஆண்டுகளாக மனதில் சேர்ந்திருக்கின்ற அழுக்குகளைத் துப்பரவு செய்யும் முயற்சியின்போது தவிர்க்க முடியாதபடி ஏற்படும் விளைவுகளாகும். எனினும் அதனால் ஒரு புகழ்பெற்ற தினம் வரக் காத்திருக்கின்றது. அன்று நாம் மகிழ்ச்சி அடைவோம். மிக மேலான தெய்வத்தன்மையின் ஆசீர்வாதமாக அதனை எதிர்பார்த்தே நாம் யோகப் பயிற்சியைச் செய்கின்றோம். கடவுளை முற்றாக நம்புகிறவனும், கடவுளில் சரண் அடைகிறவனும் கடவுளாலேயே பாதுகாக்கப்படுகின்றான். இதனால் பெரிய போதகரான பகவான் "அப்படியானவன் என்னை இழப்பதில்லை; நானும் அவனை இழப்பதில்லை" என்று கூறுகின்றார். கடவுளில் தஞ்சம் புகுந்த ஒருவரைக் கடவுள் எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடுவதில்லை. அவ்வாறான ஒருவரின் நேர்மையும் விசுவாசமும் தமது பலன்களை அவருக்கு அமைதி, பாதுகாப்பு, திருப்தி என்பனவாகப் பூரணமாய் வழங்கும். எமது யோக முயற்சியில் நாம் அகத்தே சிறிதளவு கூட இரட்டை வேடமின்றிப் பூரண நேர்மையுடன் இருக்கவேண்டியதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் கடவுளைப் பரிசோதித்துப் பார்க்கவோ, அவரோடு சூதாடுவதாகவோ, அவரிடமிருந்து சொந்த நலனுக்காக எதையேனும் எதிர்பார்க்கவோ கூடாது. கடவுள் எங்கும், எப்போதும் நீக்கமற இருப்பதால் நாம் மேற்போந்தவற்றைத் தெளிந்துகொண்டு உடனேயே எம்மீது அவரது அருள் பொழிவதை ஏற்றுக்கொள்வோம்.

*ஒரு சமுதாயத்தின் நம்பிக்கை தனிமனிதனின் ஒழுக்கமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26) உயர்ந்த யோகி

"எல்லா உயிர்களிடத்திலும் தனது ஆன்மாவைக் காண்பவனும் தனது ஆன்மாவில் எல்லா உயிர்களையும் காண்பவனும், யோகத்தினால் தன்னை நிலைநிறுத்திக்கொண்டு எங்கும் ஒன்றையே காண்கிறான். "என்னை எங்கும் காண்பவனுக்கும், என்னில் எல்லாவற்றையும் காண்பவனுக்கும் நான் ஒருபோதும் மறைவதில்லை; எனக்கு அவனும் ஒருபோதும் மறைவதில்லை". "எவரொருவர் என்னிலேயே வேரூன்றி எல்லா உயிர்களும் தங்கியுள்ள என்னையே தொழும் யோகியாக எவ்வித வாழ்க்கை வாழினும் அவர் என்னிலேயே வதிகின்றார். "எவரொருவர் தனது சொந்த ஆன்மாவோடு துன்பமாகவோ, இன்பமாகவோ அதனையே எங்கும் காண்கிறாரோ ஓ அர்ச்சுனா! அவரே உயர்ந்த யோகியாகக் கருதப் படுகின்றார்".

(தொடரும்...

## மங்களம் பொங்கும் வாழ்வை அளிப்பான்!

*பல்லவி*

தமிழ்த் தெய்வம் முருகனின் தாள் பணிவோம்! - என்றும்
தலை தாழ்த்தி அவனை நாம் வணங்கிடுவோம்!

(தமிழ்த்)

*அனுபல்லவி*

அமிழ்தான தமிழில் அவன் புகழ் பாடுவோம்! - அந்த
ஆறுமுகன் அருளாலே ஆனந்தம் அடைந்திடுவோம்.

(தமிழ்த்)

*சரணம்*

கருணை முகத்தோடு காட்சி தருவான்! - மனம்
கனிந்தே அடியவர்தம் துயர் போக்குவான்!
உருகிடும் அடியவரின் உள்ளங்களில் உறைவான்! - அந்த
உமை மைந்தன் எமக்கென்றும் துணையாய் வந்திடுவான்!

(தமிழ்த்)

வேல் ஏந்தி வினை தீர்க்க வருகை தந்திடுவான்! - வாழ்வில்
வெற்றிகளைத் தந்தே எங்களைக் காத்திடுவான்!
மால் மருகன் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தந்திடுவான்! - என்றும்
மங்களம் பொங்கும் வாழ்வை எமக்களிப்பான்!

(தமிழ்த்)

-கி. குலசேகரன்-

*உண்மையான அடக்கமே எல்லா நற்குணங்களுக்கும் பிறப்பிடமாக இருக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன அமைதியைப்பெற செய்யவேண்டியது

– *செல்வி சரவணமுத்து* அவர்கள் –

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு வடிவில் அமைதியும் ஒன்று. மனமானது குரங்கு. அதனை ஒருநிலைப்படுத்துவதற்கு ஊடகமாக அமைவன இறை தியானம், விரதம், பஜனை, பாடல், சைவக்கிரியை நெறிகள் என்பனவாம்.

செல்வத்துள் செல்வம் எது? என்ற வினா காலந்தோறும் எழுதப்பட்டு வந்த வினாவேதான். காலம் நேரம் சந்தர்ப்பம் சூழ்நிலை என்பவற்றிற்கேற்ப பல்வேறு விடைகளும் அளிக்கப்பட்டு வந்தன. பணம் என்றும், பண்டம் என்றும், கல்வி என்றும், செவிச் செல்வம் என்றும் பலவாறு கூறப்பட்டன. ஆனால் இன்று மனச்சாந்தியே செல்வத்துள் செல்வமாக இருப்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். மனச்சாந்திக்குத்தான் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள் ளது. யாரைக் கேட்டாலும் சாந்தி இல்லை, அமைதி இல்லை, நிம்மதி இல்லை என்றுதான் கூறுகின்றனர். புறச் சாந்தியிலும் அகச் சாந்தியே முக்கியம். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதுபோல அகத்தில் சாந்தி இருந்தால்தான் புறத்திலும் இருக்கும்.

நம் முன்னோர்கள் சமயம் என்ற ஒன்றை ஏற்படுத்தியமை வீணுக்கன்று. சமயத்தின் மூலம் ஒவ்வொருவர் மனத்திலும் சாந்தி, சமாதானம், நிம்மதி என்பவற்றை நிலைநிறுத்த முடியும் என நம்பினர். சமய நெறிமுறைகளை ஒழுங்காக அனுட்டிப்பதன்மூலம் மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்தனர். இன்று பெரும்பாலும் சமய நெறிகள் வாழ்வில் கடைப்பிடிக்கப் படுவதில்லை. அதனால் மனித வாழ்வில் நிம்மதியும் பறிபோகிறது.

மன அடக்கம், புலனடக்கம் என்பவற்றின்மூலம் பெறப்படும் சாந்தி நித்தியமானது. தியானம், சமய வாழ்வு என்பன மன அடக்கத்தையும், புலனடக்கத்தையும் ஏற்படுத்த உதவுகின்றன. மனதைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதனால் மனதைச் சாந்தப்படுத்த முடியும். மனத்தில் தோன்றுகின்ற உணர்ச்சிகளில் பெரும்பாலானவை தீய உணர்ச்சிகளே. அதனால் நிம்மதி குலைகிறது. சமய நெறியில் வாழ்வதன்மூலம் தீய உணர்ச்சிகள் தோன்றாமல் தடுக்கமுடியும். அதேவேளை உணர்ச்சிகளை அறிவினாலும் அடக்க இயலும். பகுத்தறிவு என்ற பெயரில் எப்படி எப்படியெல்லாம் நடந்துகொள்கிறோம். ஆனால் அந்தப் பகுத்தறிவு தீய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதாக இல்லை. தூய நல்லறிவினாலேயே மனதில் தோன்றும் எல்லையற்ற தீய உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும். உணர்ச்சிகளைத் தூய அறிவினால் வெல்பவர்களே உத்தமர்கள் ஆவர்.

மனச்சாந்தி குலைவதற்குப் பல காரணிகள் உள்ளன. அழுக்காறு, அவா, வெகுளி, வெறுப்பு, இன்னாச்சொல் என்பவற்றால் நாம் ஆளப்படும்போது எமது சாந்தி பழுதுபட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகிறது. எமது நிம்மதி குலைவுக்கு முதலில் நாமே காரணம் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

பிறர்மீது பொறாமைகொள்ளக் கூடாது. பிறர் பொருளில் இச்சை கொள்ளல் ஆகாது. பிறர்மீது கோபங்கொள்ளக் கூடாது. பிறருடன் பகைத்தல் ஆகாது. பிறருடன் கடுஞ்சொல் பேசக்கூடாது. இவ்வாறு நடந்துகொள்ளப் பழகிக்கொள்வோமானால் நாம் நிம்மதியாக வாழலாம். கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுத கதைபோல நிம்மதியைப் பெறுவதற்குரிய வழிமுறைகளை எம்மிடத்தில் வைத்துக்கொண்டு வெளியில் அதனைத் தேடி அலைகின்றோம்.

நிம்மதியைப் பாதிக்கும் ஒரு விடயத்தை எடுத்துக்கொள்வோம். அதாவது கோபம் ஒரு போதை. அதற்கு அடிமையாகிவிட்டால் எமது பகுத்தறிவு பறிபோய்விடும். என்ன பேசுவது, என்ன செய்வது என்று எதுவுமே தெரியாமல் இருக்கும். அதனால் எத்தனையோ கெடுதிகள், தீமைகள் ஏற்படுகின்றன. காலையில் கோபத்துடன் வாழ்க்கையை ஆரம்பித்துப் பகல் முழுவதும் கோபத்துடன் உறவாடி வாழ்க்கையை நடாத்தி இரவில் கோபத்துடனேயே படுக்கைக்குப் போய் தூக்கத்தையும் கெடுத்துக்கொள்ளும் பலரை நாம் காண்கின்றோம். அவர்கள் தூக்கத்தை மட்டுமா கெடுத்துக்கொள்கிறார்கள். வாழ்க்கையையும் அல்லவா கெடுத்துக்கொள்கிறார்கள். இப்பொழுது கோபத்தை எவ்வாறு தவிர்ப்பது அல்லது தணிப்பது என்னும் வினா எழுகிறது. பெரியவர்கள் அதற்கும் வழி கூறியிருக்கிறார்கள்.

முதலில் கோபம் வருகிறது என்று தெரிந்ததும் ஒரு தம்ளர் தண்ணீர் அருந்த வேண்டும். அதன்பின் முடியுமானால் முகம் பார்க்கும் கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பார்க்க வேண்டும். அமைதியாகப் படுத்துக்கொள்ளலாம். அல்லது கோபம் ஏற்பட்ட இடத்திலிருந்து விலகி வேறிடத்திற்கு நடந்து செல்லலாம். கடவுளின் நாமங்களைச் செபிப்பதோடு தோத்திரங்களையும் மனமுருகிப் பாடவேண்டும். நல்ல சிந்தனைகளை மனதில் வரவழைக்க வேண்டும். ஏதாவது நற்கருமங்கள் சேவைகள் என்பவற்றில் ஈடுபட்டு பொறி புலன்களை நன்மையான காரியங்களில் நாட்டமுறச் செய்தல் அவசியம். “மௌனம் கலக நாஸ்தி” என்பர். மௌனமாக இருத்தல் மிக நன்று. ஒரு கைதட்டி ஓசை எழாது. கடவுளிடம் சகலதையும் ஒப்படைத்துவிட்டுக் கடவுள் சிந்தனையோடு சும்மா இருந்தாலே மிக உயர்ந்த சாதனை என்கிறது சைவநீதி.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் நல்லறிவு பெற்றவனாக வாழவேண்டும். ஒழுக்கம் கட்டுப்பாடு அமைதியான சூழ்நிலையில் உருவாக்கிக்கொள்ள வேண்டும். சிறு வயதில் கிரிசாம்பாள் கதை எடுத்துக்காட்டாக இருக்கிறது. வறுமையின் சூழலில் ஒரு பிரபு சிறியவர்களுக்காகச் செய்து வைக்கப்படும் மோதகங்களை எல்லோரும் சண்டையிட்டு எடுத்தார்கள். இவள் அமைதியாகப் பிரபுவிற்கு நன்றி கூறி சிறிய மோதகங்களைப் பெற்று இறுதியிலே பொற்காசையே பெற்றாள். இன்னும் ஔவைப்பாட்டி பூசையை அவதியுடன் செய்யவே பிள்ளையார் ஆறுதலாகச் செய்யும்படி கூறினார். பின் தனது தும்பிக்கையால் பாட்டியைத் தூக்கி கைலாசத்தில் முதல் ஆளாகச் சேர்த்தார். எனவே அமைதியாகச் செல்வதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மை பெறுகிறோம். தவறுகளை விலக்கக் காரணமாகிறோம். எந்தவொரு விடயமும் அமைதியில்தான் வெற்றி காண்கிறது.

பஞ்ச பாண்டவர்களில் தருமன் பொறுமையாக இருந்து தன் பெயரை நிலைநாட்டினான். சிறுவர்களுக்கு ஆமை, முயல் ஓட்டப்போட்டியே எடுத்துக்காட்டாக அமைகிறது. எமது தமிழ் மொழி நூல்கள் ஆசிரியர்கள் ஆன்றோர்கள் ஆழ்ந்து கற்று அமைவுற ஆசானிடம் கேட்ட அறிவுரைகளை எல்லாம் நூல்வடிவில் தந்துள்ளார்கள். இவைகளில் அமைதி எத்திறம் சிறந்த பண்பாகக் காணப்படுவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

இவ்வாறாகப் பல அறிவு நூல்களில் "அமைதி" என்னும் விடயம் கூறப்படுவதை மனிதனின் ஒழுக்கத்தில் ஒன்றாக அமைவதை நூல்கள்மூலம் அறிவோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக
உலகமெலாம்"

மற்றவர்கள் சொல்வதை நீ பொருட்படுத்தாதே. உன் கடமைகளை தவறாமல் செய்துவா.

இன்று உன்னைக் குறை சொல்பவர்கள் நாளை புகழ்ந்து பேசுவார்கள். இறைவனின் தொண்டன் ஒருபோதும் கவலையில் ஆழ்வதில்லை.

## என்றும் எம்முடன்....

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் பல வருடகாலமாக நடைபெற்ற வைத்தியசேவையின் நிமித்தம் எம்மோடு இணைந்து உடல்நலக் குறைவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு முன்னின்று சேவை ஆற்றிய மருத்துவர் பொன். சின்னத்தம்பி அவர்கள் 17.03.2024 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்ததையிட்டு ஆறாத் துயர் அடைகின்றோம்.



அமரர் ஒரு ஆன்மீகவாதியாக விளங்கியதோடு தன்னிடம் சிகிச்சைக்கு வருகின்ற மக்களையும் வழிப்படுத்திய ஒரு பெருந்தகையாளராக விளங்கினார். அத்துடன் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றிய பல சமுகப் பணிகளுக்கு தன்னாலான ஆதரவினை வழங்கியதோடு நல்ல ஒரு ஆலோசகராகவும் விளங்கினார்.

அவருடைய ஆன்மா சந்நிதி வேற் பெருமானின் பாதாரவிந்தங்களில் அமைதிபெற வேண்டி நிற்கின்றோம்.

*எந்தக் காரியத்திலும் வெற்றியின் முதற்படி அந்தக் காரியத்தில் கொண்டிருக்கும் ஆர்வம்தான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 81

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 தீக்குச்சி மட்டும் இருந்தால் தீப்பற்றி எரிந்திடாது
தீண்டியதை உரசும் போதே தீப்பற்றி எரிதல் போல
ஆண்டவனும் உள்ளானென்றால் அருள்மழை பொழிந்திடாது
வேண்டி நாம் ஈர்த்திட்டாலே அருள்மழை பொழியும் காண்பீர்.

02 குச்சியால் ஏற்றும் தீபம் தன்னைநாம் வணங்கிக்கொண்டு
ஏற்றிய குச்சியைப் பின் மிதித்துமே அழித்தல் போல
கிடைத்ததோர் வாழ்வுதன்னை மதித்துநாம் வாழும் வேளை
பெற்றதைத் தந்தோர் மனதை மிதித்திடல் மனிதமாகா.

03 தீயிலே ஊற்றும் எண்ணை திடீரென அழிந்தே போகும்
திரிவழி ஊறும் எண்ணை தினம் பல எரிதல் போல
தீயவழிச் செலவால் செல்வம் திடீரென அழிந்தேபோகும்
உரியவழிச் செலவால் செல்வம் ஊழிவரை நிலைத்தே நிற்கும்.

04 அடுப்புக்குள் நெருப்பை வைத்தால் உலையது கொதித்தே அவியும்
அவிந்ததால் பொழுது ஒன்றில் அதுகெட்டுமே போதல் போல
வாயிலே நெருப்பை வைத்தால் புலனைந்தும் கொதித்தே அவியும்
அவிந்ததால் ஆயுள்தன்னைப் பாதியில் பறித்தும் போகும்.

05 பெரிதாக ஒன்றை நீங்கள் விரும்புதல் பிழையென்றன்று
சிறிதான ஒன்றை அதற்காய் வெறுத்தலே பிழையென்றாகும்
பெரிதாக விரும்பியது கிடைக்காமல் போகும்வேளை
சிறிதான ஒன்றை அதற்காய் இழத்தலே பிழையென்றாகும்.

06 ஒருவரின் நடத்தை பற்றி அவரிடம் உரைக்கு முன்னர்
எங்களின் நடத்தைதன்னை நாங்களே எண்ணல் வேண்டும்
நடத்தையில் பிழையதிகம் நம்மிலும் இருந்திடலாம்
நம்மைநாம் சீர்செய்தாலே அடுத்தவர் நமதை ஏற்பார்.

*யோசனைகள் நேரத்தையும் காலத்தையும்போல யாருக்காகவும் காத்திருப்பதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 ஒன்றுமிலார் என்றொருவர் உறவினை ஒதுக்கு முன்னர்
ஒன்றறிவீர் அவரிடம் ஒன்றிருக்கும் அது ஆத்மபலம்
நன்றவரை மதித்தே நீங்கள் அவர்மகிழ நடக்காவிட்டால்
ஒன்றுண்மை அவர் கொதிப்பே உமதழிக்கும் உணர்ந்துயர்வீர்.

08 கறையான்கள் இலாப்புற்றில் பாம்பு குடியேறல் போலும்
பிறையில்லா வானைவந்து இருள்கௌவும் தன்மை போலும்
மறைந்திடும் எதிர்ப்பால் உடலை நோய்வந்து கௌவும் அதுபோல்
இறையில்லா இதயம்தன்னை அசுரமும் கௌவும் கௌவும்.

09 தேவைக்கு ஒருவரை தேடிப் பயன்படுத்திப்பின்
தேவையெல்லாம் முடிந்ததென்று ஒதுக்கிடுதல் நன்றன்று
பூசைக்குப் போகின்ற பூக்களெல்லாம் பூசையின் பின்
பூவையரின் பூங்குழலில் யொலித்திடுதல் வேறாமோ?

10 ஆபத்து எமக்கென்றால் கூட்டுப் பொறுப்பென்போம்
அதுவேதான் பிறர்க்கென்றால் எமக்கென்ன என்றிருப்போம்
பிறர்துன்பம் எமதாக்கி எமதின்பம் பிறர்க்காக்கி
வாழாத வரைக்குமிங்கே எல்லாமே வேசமாகும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செந்திவேல் மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செந்திவேல் மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

திரு+புகழ்= திருப்புகழ். திரு என்பதற்கு கண்டோர் விரும்பும் அழகு எனப் பொருள் விரிப்பர். எனினும் திரு என்பது செல்வம், இலக்குமி, தெய்வம், தெய்வத்தன்மை என்றெல்லாம் அர்த்தஞ் செய்யப்படும். நூல்கள் திருவோடு சேர்த்துப் பேசப்படுகிறது. திருக்குறள், திருமந்திரம், திருவாய்மொழி உதாரணம். நூலாசிரியர் பலரும் அப்படியமைந்துள்ளனர். திருவள்ளுவர், திருத்தக்கதேவர், திருமூலர், திருவாதவூரர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருமாளிகைத் தேவர் போல்வருவன கவனித்தற்குரியன. ஆலயத்தைத் திருக்கோயில் என்பர். இத்தோடு தொடர்பான திருநீறு, திருநாமம், திருவிழா, திருமடம், திருப்பதி எனிற் பெருகும். இவ்வண்ணம் ஒப்பீடு செய்கையில் ஒரு உண்மை தேற்றமாகும். திரு என்று தெய்வத்தன்மையையும், தெய்வாம்சத்தையும் ஏன் தெய்வத்தையும் குறிக்கிறது எனலாம். திருமணம், திருமாங்கல்யம், திருவிளக்கு, திருக்கல்யாணம், திருமாலை, திருமஞ்சனம், திருவாளர், திருவாட்டி, திருநிறை செல்வி என வருவனவும் மங்களகரமான பிரயோகங்களே. இப்படிச் சீர்தூக்கிப் பார்க்கையில் திருப்புகழ் அமைவின் கருத்து என்ன.

புகழ், இசை, கீர்த்தி என்பன ஒரே பொருளுடையன. இன்னும் பல ஒத்த பதங்களை நிகண்டிலும், அகராதியிலும் காணலாம். எனவே ஆழ்வார் பாசுரங்களும் சைவ தோத்திர சாத்திரங்களிற் பலவும் திருவோடிணைந்தனவே. இறைவனின் பெரும் புகழைப் பாடு வண்திருப்புகழ் தேவபாணி என்றெல்லாம் பெயர் பெற்றாலும் திருப்புகழ் அருணகிரியாற் பாடப்பெற்ற முருக தோத்திரங்களையே குறிக்கும். இஃது ஒரு முருக பக்திப் பிரபந்தம் என்று அறுதியிட்டுக் கூறலாம். பதினைந்தாம் நூற்றாண்டில் எழுந்த இப்பிரபந்தம் இன்று மக்கள் மத்தியிலே பாடப்படும் கீர்த்திக்கனியென்பர் ஆழ்வார். கம்பர் செவி நுகர்கனியென்றார். சுமார் 2000 ஆண்டுகளுக்குமுன் எழுந்த திருக்குறளிலே புகழ் என்ற அதிகாரம் தனியாய் இருப்பினும் கடவுள் வாழ்த்திலே புகழ் பேசப்படுகிறது.

இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு.

-திருக்குறள் 5.

புரிதல்- எப்பொழுதுஞ் சொல்லுதல், பொருள் சேர்புகழ்- மெய்ம்மை சேர்ந்த புகழ். இறைமைக் குணங்கள் இலராயினாரை உடையர் எனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின் அவை முற்றவம் உடைய இறைவன் புகழே பொருள் சேர்புகழ் எனப்பட்டது. பரிமேலழகர் விளக்கம்.

இந்தத் திருப்புகழ் என்ற பிரயோகம் பல இடங்களில் வரினும் மூவர் உடைய கருத்துக்கள் இங்கே எடுத்தாளப்படுகின்றன. அவை வருமாறு:

*தைரியப்படுத்துவது ஒருவனுக்குச் செய்யும் உதவியில் மூன்றில் ஒரு பங்கு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகழ் விருப்பால் பாடிய அடியேன்
படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே.
-சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

தூராத மனக்காதல் தொண்டர் தங்கள்
குழாம் குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடி.
-குலசேகரப் பெருமாள்.

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள் ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ்பேச வேண்டும்.
-இராமலிங்க சுவாமிகள்.

இறைவனைப் போற்றிப் புகழ்ந்து, துதித்து, நாவாரப் பாடிய தேவார திருவாசக ஆழ்வார்கள் அருளிச் செயல்போல இறைவாக்காக எழுந்த திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, கந்தரந்தாதி, வேல், மயில், சேவல் விருத்தங்கள் திருவகுப்பு எல்லாமே அருணகிரியார் வாக்கு. வாக்குக்கு அருணகிரிதான்- சந்தத் திருப்புகழ் என்று இதையழைப்பர். இதைப் பாடப்பாட முருகன் ஓடி வருவான். என்ன குறைக்கும் இது ஔடதமாம். தாயுமானார் இதிலே ஆழங்காற்பட்டு இப்படிப் பாடுகின்றார்.

தேவர் தொழுந்திருவாத வூர்த்தேவே என்பேன்
திருமூலத் தேவே, இச்சகத்தோர் முத்திக்கு
ஆவல் உறச் சிவஎன் வாக்குடனே வந்த
அரசே, சும்மா இருந்து உன் அருள்சாரப்
பூவுலகில் வளர் அருணகிரியே.....
-ஆகார புவனம் 31.

ஐயா, அருணகிரி அப்பா உனைப்போல
மெய்யாக ஒரு சொல்விளம்பினர் ஆர் - வையகத்தோர்
சாற்றரிது என்று ஏசற்றார்; தன் அனையாய் முக்கண்எந்தாய்
நாற்றிசைக்கும் கைகாட்டினான்.
-தடல் பொய்யுறவு 26.

இவ்வாறு நெஞ்சம் கவரும் அருணகிரிப் பெருமானே- திருப்புகழ் முருகன் அருளால் வழிந்த திருமேனி என்பதை அழகாகப் பாடியுள்ளார்.

பக்கரை விசித்திரமணி பொற்கலனை இட்டநடை
பட்சியெனு முக்ரதுர கமுதீபப்
பக்குவம லர்த் தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கது மதிக்கவரு குக்குடமும் ரட்சைதரு
சிற்றடியு முற்றிய பன்னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ்வி ருப்பொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே.

சுவாமிகள் திருவாய் மலர்ந்த கந்தர் அலங்காரத்திலேயே திருப்புகழின் செவ்வி பேசப்படுகிறது.

படிக்குந் திருப்புகழ் போற்றுவன கூற்றுவன் பாசத்தினாற்
பிடிக்கும் பொழுது வந்தஞ்சே லென்பாய் பெரும் பாம்பினின்று
நடிக்கும் பிரான் மருகா கொடுஞ் சூரனடுங்க வெற்பை
இடிக்கும் கலாபத் தனிமயிலேறு மிராவுத்தனே.
-கந்தரலங்காரம் 50.

திருப்புகழை உரைப்பவர்கள் படிப்பவர்கள் மிடிப்பகைமை
செயித்தருளு மிசைப்பிரிய
திருத்த மாதவர் புகழ் குருநாதா.
-திருப்புகழ் 173.

மிடி- வறுமை, செயித்து- தொலைத்து வெற்றிகண்டு திருவகுப்பிலும் திருப்புகழின் மேன்மை பேசப்படுகிறது.

துதிக்குமடி யவர்க்கொருவர் கெடுக்கஇடர்
நினைக்கின வர் குலத்தைமுத லறக்களையும்
எனக் கொர் துணையாகும்

01) சொலற்கரிய திருப்புகழை யுரைத்தவரை
யடுத்த பகை யறுத்தறிய வறுக்கியெழு
மறத்தை நிலை காணும்.
-வேல்வகுப்பு.

01) சொல்லிலே அடங்காத பெருமையைக் கொண்ட திருப்புகழை எடுத்து உரைப்பவர்க்கு, நேரிடும் பகைகளை, அறுத்துத் தொலைக்க, கோபித்துக் கிளம்பும்- அறநெறியை நிலைத்து நிற்கும்படி உதவி செய்யும் (தணிகைக் குகனது வேல்)

திருப்புகழிலேயே இன்னொரு பாடல் வருமாறு

சினத்தவர் முடிக்கும் பதைத்தவர் குடிக்குஞ்
செகுத்தவ ருயிர்க்குஞ் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறியோம்யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும் 1
நிறைப் புகழுரைக்குஞ் செயல்தாராய்.
-திருப்புகழ் 263.

***இதன் கருத்து***

முருகவேளின் புகழை ஓதும் அடியார்களிடம் கோபங் கொண்டவர்களின் தலைக்கும், அவர்களோடு பகை பூண்டவர்களுடைய குடிக்கும், கொல்பவர்கள் உடைய உயிர்க்கும், கோபத்துடன் நோக்கிச் சிரிப்பவர்க்கும். பழிப்பவர்க்கும், திருப்புகழ் நெருப்பாம். என்னும் உண்மையை நாம் அறிவோம்.

முருகன் திருப்புகழ் அடியார் கருதினதைத் தரும், மனத்தை உருக்கும். இருண்ட கருவை (பிறப்பை) இனிப் பிறவாதவாறு அறுக்கும். நெருப்பையும் எரித்தழிக்கும், மலையையும் பொடிபடுத்தும், ஆதலால் உனது நிறை புகழை உரைத்து ஓதும் திருப்பணியை எனக்கும் பணித்திடுவாயாக.

முருகவேள் பன்னிரு திருமுறை தொகுதி1 - பக்கம் 157.

திருப்புகழின் மொத்தம் பதினாறாயிரம் என்றோர் பாடல் சொன்னாலும், முருகவேள் பன்னிரு திருமுறைத் தொகுப்பில் 1304 பாடல்கள் அமைந்துள்ளன.

அருணகிரி நாதர்பதி னாறா யிரமென்
றுரைசெய் திருப்புகழை யோதீர் - பரகதிக்க.
தேணி, அருட்கடலுக்கேற்றம், மனத்தளர்ச்சிக்
காணி, பிறவிக் கரம் ஆகும்.

அருணகிரிப் பெருமான் பாடியருளிய பதினாறாயிரம் எனச் சொல்லப்படும் திருப்புகழை ஓதுங்கள், அது பரகதியைச் சேர்வதற்கு ஏணியாய் இருக்கும். அருட்கடலில் குளிப்பதற்கு ஏற்ற மரம் ஆகும். மனத்தளர்ச்சி இல்லாவகை அழுத்தம் தருவதற்கு ஆணியாகும், பிறவி வேரை அறுப்பதற்கு நல்ல அரம் ஆகும்.

முருக பக்தர்களின் கைநூலாகத் திகழும் திருப்புகழின் பெருமையை உற்றுணராது, வெறும்புகழ் பாடுபவர்கள் திருப்புகழால் எல்லா நலமும் பெறலாம் என்ற உண்மையை நாம் அறிய வைக்க அருளாளர் அதன் சிறப்பைப் பாடி வைத்துள்ளனர்.

திருப்புகழ் படிப்பவர்க்குமவர் சிந்தை வலுவாலே
ஒருத்தரை மதிப்பதில்லை உன்றன் அருளாலே
பொருப்புக மிகப்பொருது வென்று மயில்மீதே
தரித்தொரு திருத்தணியில் நின்ற பெருமாளே.

பொருப்பது பொடிப்பட விடுத்திடு கைவேலா
இருப்பிடம் உனக்கெது எனக்கரு ளியம்பாய்
உருக்கநல் விழுக்குலம் ஒழுக்க மிலரேனும்
திருப்புகழ் படிப்பவர் மனத்தினில் இருப்பான்.

*சுதந்திரத்திற்குக் கட்டுப்பாடுகள் உண்டு. ஆனால் எல்லைக்கோடுகள் இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் பெறலாம் நலம் பெறலாம் எந் நாளும்
வானம் அரசாள் வரம்பெறலாம் - மோனவீ
டேறலாம் யானைக் கிளையான் திருப்புகழைக்
கூறினார்க் காமேஇக் கூறு.

எல்லாரும் ஞானத்தெளிஞரோ? கேளீர் சொல்
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ - பொல்லாக்
கருப் புகழைக் கேட்குமோ கானமயில்வீரன்
திருப்புகழைக் கேட்குஞ் செவி.

எனவே திருப்புகழையே தினம் பாடித் திருமுருகன் திருவடியையே சேர்வோமாக.

## கர்மத்தைப் போக்க தர்மம் செய்வோம்

கர்மத்தைப் போக்க தர்மம் ஒன்றே உகந்த வழி. ஆதலால் இயன்றளவு முடியுமானவரை மனிதன் தர்மம் செய்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும். பஞ்சமா பாதகங்களைச் செய்துவிட்டு அதனைப் பாவ மன்னிப்புமூலம் போக்க முடியுமா?

நாம் செய்த வினைகளை நாமே அனுபவித்தாக வேண்டும். இதையேதான் இந்து சமயம் உறுதியாகக் கூறுகின்றது. வினை விதைத்தவன் வினைதான் அறுக்க முடியும். தினை அறுக்க முடியாது. இவைகளில் இருந்து விடுபட நன்மையான காரியங்களை நாடுங்கள். தான தர்மங்கள் செய்வதில் தாமதியாதீர்கள். தர்மம் தக்க சமயத்தில் வந்து தலை காக்கும். தர்ம காரியங்களை இன்றே அதை நன்றே செய்வோம்.

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| மார்ச் | 18 | பங் 05 | திங்கள் | நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் |
| மார்ச் | 18 | பங் 05 | திங்கள் | முருகேசு சுவாமிகள் |
| மார்ச் | 21 | பங் 08 | வியாழன் | யோகர்சுவாமி |
| மார்ச் | 28 | பங் 15 | வியாழன் | காரைக்காலம்மையார் |
| ஏப்ரில் | 06 | பங் 24 | சனி | பரமகுரு சுவாமி |
| ஏப்ரில் | 07 | பங் 25 | ஞாயிறு | குழந்தைவேற்சுவாமி |
| ஏப்ரில் | 09 | பங் 27 | செவ்வாய் | செல்லப்பாசுவாமி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| செ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| T. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| டனாஸ் | லண்டன் | 15000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | தேங்காய், 1மூடை அரிசி |
| சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்) | தும்பளை | 1மூடை மா |
| திரு சுதாகரன் குடும்பம் | மயிலங்காடு | 1000. 00 |
| கு. அமரசிங்கம் | வல்வெட்டி | 2500. 00 |
| சீ. சாந்தநாதன் | வதிரி | 1000. 00 |
| J. வினித்தன் | இமையாணன் | 1000. 00 |
| ச. அருள்செல்வன் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| N. நேத்திரன் | கொக்குவில் | 1000. 00 |
| ப. கிரிதரன் | ஆனைக்கோட்டை | 10000. 00 |
| செ. கஜன் | கனடா | 10000. 00 |
| சோ. தங்கேஸ்வரி | சங்கானை | 3000. 00 |
| சு. மகிந் | கல்வியங்காடு | 2500. 00 |
| ப. அக்ஷயன் | லண்டன் | 1000. 00 |
| ச. கௌரி | தெல்லிப்பழை | 5000. 00 |
| சிவா சரவணபவன் குடும்பம்<br>திரு பார்த்தீபன் குடும்பம்<br>திரு செல்வமோகன் குடும்பம் | அச்சுவேலி | 6000. 00 |
| தாய் தந்தை நினைவாக சியாமளா புஸ்பநாதன் | தெகிவளை | 10000. 00 |
| சரவணாஸ் பல்பொருள் வாணிபம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| இ. மனோகரன்<br>ம. செந்தில்ராஜ்<br>ம. குமரராஜ் | கொம்மந்தறை | 15000. 00 |
| மா. பிரணவன், மோ. பிரியங்கா | கரவெட்டி (U.K) | 10000. 00 |
| திரு மயூரன் குடும்பம்<br>திரு பிரசன்னா குடும்பம்<br>திரு நிமலன் குடும்பம் | கரவெட்டி (U.K) | 10000. 00 |

*நீ சிறந்தவனாய்த் திகழ விரும்பினால் தன்னடக்கமும் பணிவும் வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பிரசாந்தன் அஜிந்தா | நீர்வேலி | 5020. 00 |
| ந. தங்கலட்சுமி | கனடா | 30000. 00 |
| திருமதி ந. யோகராணிமூலம் நடராஜா நினைவாக | கனடா | 15000. 00 |
| திருமதி ந. பாஸ்கரதேவி மூலம் நாகேந்திரன் நினைவாக | கனடா | 15000. 00 |
| திருமதி தி. சறோஜினிதேவி மூலம் தில்லைநாதன் நினைவாக | ஆவரங்கால் | 10000. 00 |
| க. இளங்குமரன் மூலம் க. ஈஸ்வரி நினைவாக | கனடா | 7000. 00 |
| வ. கணபதிப்பிள்ளை | கொழும்பு | 5000. 00 |
| வ. ஆறுமுகம் | ஆவரங்கால் | 10000. 00 |
| ஏ. கனகசபாநாதன் | கனடா | 11000. 00 |
| திரு சண்முகநாதமுதலி மூலம் திருமதி ரவீந்திரன் | லண்டன் | 50000. 00 |
| திருமதி பரணிதரன் காயத்திரி | லண்டன் | 1000. 00 |
| ஜெ. ஜெயகாந்தன் | துன்னாலை (U.K) | 5000. 00 |
| அ. தங்கேஸ்வரன் | லண்டன் | 5000. 00 |
| திரு சத்தியமூர்த்தி குடும்பம் | கொழும்பு | 1000. 00 |
| அ. குமாரவேல் ஆசிரியர் | ஆனைக்கோட்டை | 10000. 00 |
| Dr குமாரவேல் அகிலன் ஆனைக்கோட்டை | (நிவாரப்பணி) | 10000. 00 |
| வே. சம்பந்தநாதன் G.S. | புன்னாலைக்கட்டுவன் | 2500. 00 |
| P. சதீஸ்காந் | வல்வெட்டி | 500. 00 |
| ம. தனுவதி | நாவற்குழி | 5000. 00 |
| திரு வாகீஸ்வரன் குடும்பம் | கனடா | 10000. 00 |
| கி. கபில் | சாவகச்சேரி | 5000. 00 |
| து. தானிஷா | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| அனிஸ் சுஜித்தா | ஜேர்மன் | 20000. 00 |
| க. அனுஷியா | மானிப்பாய் தெற்கு | 10000. 00 |
| திரு சந்திரகுமார் குடும்பம் | ஜேர்மன் | 10000. 00 |
| வே. சுபாஸ்கரன் | சாவகச்சேரி | 25k பருப்பு 5மூடை அரிசி |
| இ. நந்தன் | குப்பிளான் | 5000. 00 |
| N. இந்திரன் | பண்டத்தரிப்பு | 5000. 00 |
| N. மரியதாஸ் | மானிப்பாய் | 2000. 00 |
| சி. கருணாகரன் | கொழும்பு | 2000. 00 |
| சி. பாலரட்ணம் | குடத்தனை | 10000. 00 |
| திரு ஆனந்தராஜா குடும்பம் | லண்டன் | 25000. 00 |
| கு. ரங்கநாதன் | இணுவில் | 5000. 00 |
| ம. ஓவியா | சுன்னாகம் | 1000. 00 |
| உ. குமணன் | சுன்னாகம் | 1000. 00 |
| து. இந்திராதேவி | சுன்னாகம் | 1000. 00 |
| ச. கமலாகரன் | சுன்னாகம் | 1000. 00 |
| ராகவன் தியாகராஜா | பிரான்ஸ் | 25000. 00 |

*மற்றவர்களின் துரதிஷ்டங்களிலிருந்து எச்சரிக்கையைக் கற்றுக்கொள்வது நல்லது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Dr V. பாலகிருஷ்ணன் | வதிரி | 5000. 00 |
| திருமதி இ. கஜானந்தன் | அச்செழு | 18000. 00 |
| திருமதி முருகானந்தன் | யாழ்ப்பாணம் | 25000. 00 |
| திரு துரைசிங்கம் குடும்பம் | மல்லாகம் | 15000. 00 |
| செ. செல்வகரன் | புன்னாலைக்கட்டுவன் தெற்கு | 5000. 00 |
| சுஜன் சிந்துஜா | கனடா | 1மூடை அரிசி |
| J. யோகேஸ்வரி | கரவெட்டி | 1000. 00 |
| கோ. ஜெந்தன் | சுதுமலை | 2000. 00 |
| ஆ. கதிர்காமநாதன் | தாவடி (கனடா) 3மூடை அரிசி | 5000. 00 |
| ஜெனமேஜெயன் | இணுவில் | 10000. 00 |
| நியூ மைதிலி நகை மாடம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| மீனாம்பிகை | ஏழாலை மேற்கு | 10000. 00 |
| செ. கணேசமூர்த்தி | கனடா | 5000. 00 |
| அ. கீர்த்தனன் | அமெரிக்கா | 10000. 00 |
| த. யோகேஸ்வரன் | சண்டிலிப்பாய் | 10000. 00 |
| திரு பரமநாதன் குடும்பம் | கந்தரோடை | 1000. 00 |
| சந்திரன் பொன்னையா | பண்டத்தரிப்பு | 1000. 00 |
| சொக்கலிங்கம் சிவகுமாரி | கொழும்பு-15 | 9000. 00 |
| த. ராமச்சந்திரன் | ஊரெழு | 1000. 00 |
| சிவகுமார் மூலம் அ. பத்மினி, அ. அபிநயா | லண்டன் | 21000. 00 |
| S. பபிஷன் | நீர்வேலி 1மூடை அரிசி | 5000. 00 |
| இ. அரணசொருபன் | நல்லூர் | 1000. 00 |
| உ. பாலகௌரி | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| வே. சதுசாயினி | கரணவாய் | 5000. 00 |
| K. ஜெயகரன், A. பிருதினி | மட்டுவில் | 5000. 00 |
| தி. சத்தியா | மந்திகை | 3000. 00 |
| அ. வனிதா | திருநெல்வேலி | 500. 00 |
| S. சஞ்சியன் | நெல்லியடி | 1000. 00 |
| நா. நர்த்தனன் | தெல்லிப்பழை | 10000. 00 |
| பொ. ஸ்ரீஸ்கந்தராசா | அச்சுவேலி | 1000. 00 |
| கிஷாந் பரமசிவம் | குப்பிளான் | 10000. 00 |
| திரு துரைராஜா குடும்பம் | அச்சுவேலி | 5000. 00 |
| வ. துரைராசா | உரும்பராய் | 500. 00 |
| J. சாயீஷா | இணுவில் | 15000. 00 |
| சி. சிவரூபன் | கோண்டாவில் | 5000. 00 |
| இ. கருணைதாசன் | நீர்வேலி | 5000. 00 |

***எண்ணங்களை உயர்வாகக் கருதினால் மட்டுமே உயர்ந்திட முடியும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| T. யோகநாதன் | அச்சுவேலி | 5000. 00 |
| பி. சபிஸ்காந் | வல்வெட்டி | 500. 00 |
| ஜெ. யோகேஸ்வரி | கரவெட்டி | 2000. 00 |
| ரெ. விநாயகநாதன் | பருத்தித்துறை | 5000. 00 |
| நா. ஜெகதீஸ்வரன் | தெல்லிப்பழை | 2000. 00 |
| மு. தனேஸ்வரி | மாலிசந்தி | 2000. 00 |
| S. ஹரிகரன் | கொழும்பு | 5000. 00 |
| ம. அக்ஷயா, ம. ஆர்த்திக் | லண்டன் | 5000. 00 |
| திரு கௌரிசங்கர் | உரும்பராய் | 2000. 00 |
| த. தனுஷன் | ஏழாலை | 1000. 00 |
| இ. வசந்தராஜ் | சுன்னாகம் | 2மூடை அரிசி |
| மு. ஜனார்த்தனன் | புங்குடுதீவு | 2000. 00 |
| திரு சிவனேசன் குடும்பம் | புங்குடுதீவு-2 | 5000. 00 |
| ந. சோமசுந்தரம் | புங்குடுதீவு-3 | 5000. 00 |
| து. ஜஷ்மின் | மன்னார் | 2000. 00 |
| கோ. ஆதீரன் | யாழ்ப்பாணம் | 20000. 00 |
| ந. லிங்கேஸ்வரன் | சுழிபுரம் (பிரான்ஸ்) | 1000. 00 |
| மு. விநாயகமூர்த்தி | மல்லாகம் | 10k பருப்பு 1மூடை சம்பா |
| ந. ஸ்ரீஸ்கந்தராசா | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| S. சிலோஜனா | யாழ்ப்பாணம் | 15000. 00 |
| திரு கணேசலிங்கம் குடும்பம், திரு ஐயாத்துரை குடும்பம் | இணுவில் | 36500. 00 |
| R. கேசிகன், R. ஜஸ்ரின், T. வின்ஸ் | டென்மார்க் | 5000. 00 |
| திரு சிவகுமாரன் குடும்பம் | சுவிஸ் | 5000. 00 |
| பா. உமா | கரவெட்டி | 5000. 00 |
| திரு கருணைதாசன் | நீர்வேலி | 5000. 00 |
| பொ. கிருபாகரன் | அவுஸ்திரேலியா | 28507. 00 |
| ச. ராசலெட்சுமி | இணுவில் | 4புட்டி அரிசி |
| திரு கதிர்காமசோதி குடும்பம் | இணுவில் | 5k பருப்பு 1மூடை அரிசி |
| வ. நவலோகநாதன் | புத்தூர் | 500. 00 |
| செ. ஜலஷா | இணுவில் | 5000. 00 |
| பா. செல்வக்குமார் | சாவகச்சேரி (பிரான்ஸ்) | 40000. 00 |
| N. கஜபரன் | லண்டன் | 1புட்டி அரிசி 5000. 00 |
| இ. அருணசொருபன் | நல்லூர் | 1000. 00 |
| செ. ஜினோவன் | கனடா | 10000. 00 |
| சி. மதிவதனன் | அச்செழு | 15000. 00 |
| யோ. தனுஷியா | வல்வெட்டி | 1000. 00 |

(தொடரும்....

*மேன்மையான எண்ணங்களுடன் இருப்போர் எப்போதும் தனித்திரார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்மை மதியாத முனிவர்கள் திருத்திய சிவபெருமான்

– திருமதி பொ. திலகவதி அவர்கள் –

முன்னொரு காலத்தில் தாருகாவனத்தில் உள்ள முனிவர்கள் சிவபெருமானிடத்தில் அன்பில்லாதவராய் அவரை மறந்து ஒரு கடவுள் இன்றி தாமே முத்தியடையலாம் என நினைத்து தவங்களையும் யாகங்களையும் செய்தார்கள். அதனை அறிந்த சிவபெருமான் விஷ்ணுவை அழைத்து மோகினி வடிவம் எடுக்கும்படி கூறினார். விஷ்ணு அழகிற் சிறந்த ஒரு பெண் வடிவம் எடுத்து சிவன் அருகில் வந்தார். அப்பொழுது சிவபெருமான் முத்தலைச் சூலத்தையும் பிச்சைப் பாத்திரத்தையும் திருக்கரங்களிலே ஏந்திக்கொண்டு மோகினி வடிவம் கொண்ட விஷ்ணு பக்கத்தில் வர முனிவர்கள் உள்ள தாருகாவனம் போய் சேர்ந்தார். முனிவர்கள் மோகினியைக் கண்டு விரவிற்காம வேட்கை கொண்டு அக்னியில் பட்ட தளிர் போல் விரக்தியால் வெதும்பி இறந்தவர்போன்று நின்றார்கள். அதனால் முனிவர்களின் யாகமும் தவமும் அழிந்தது.

பிட்ஷாடண வடிவம்கொண்டு சென்ற சிவபெருமான் பிச்சைப் பாத்திரத்தையும் முத்தலைச் சூலத்தையும் ஏந்திக்கொண்டு பிச்சை ஏற்போர் போன்று முனிவர்களுடைய வீதியில் போய் இசையோடு வேதங்களையும் பாடினார். இருடி பெண்கள் அவ்விசையைக் கேட்டு இங்கே வந்தவர் யார் அவரை காண நம்முடைய கண்கள் ஆசையுற்றன. அவர்மீது ஆசை வைத்த அப் பெண்கள் யாவரும் கர்ப்பம் அடைந்து தெண்ணாயிரம் புதல்வர்களைப் பெற்றார்கள். அப் புதல்வர்கள் யாவரும் சிவபெருமானுடைய திருவடிகளில் அன்போடு வணங்கி துதித்து முத்தி அடைந்தார்கள். முனிவர்கள் மனம் கலங்கி இப் பெண் ஒருத்தி நம்மிடத்து வந்து மயக்கி நம் தவத்தையும் கெடுத்தாள். அதுபோல் இவ் ஆண் ஒருவன் வந்து நம் மனைவியர்களை மயக்கி கற்பை சிதைத்தான்.

அதன் பின் பிட்ஷாடண வடிவம் கொண்ட சிவபெருமானுக்கு பக்கத்திலே மோகினி வடிவம்கொண்டு நின்ற விஷ்ணு சிவபெருமானின் திருவருளினால் ஆணுருவை எடுத்தார். அறியாமை மேற்கொண்ட முனிவர்கள் சிவபெருமானை முனிவோடு நோக்கி இவரைக் கொல்வோம் என்று எண்ணி ஒரு அபிசாரஹோமம் செய்தார்கள். அந்த ஓம குண்டத்திலிருந்து ஒரு புலி ஒன்று விரைந்தெழுந்தது. முனிவர்கள் அதனை நோக்கி நீ சென்று பரமசிவனை கொல்வாய் என்று விடுத்தார்கள். அந்தப் புலி சிவபெருமான் முன் போக அவர் அதனைப் பிடித்து அதன் தோலை உரித்து வஸ்திரமாக உடுத்துக் கொண்டார். அதன் பின் அவ் ஓமகுண்டத்தில் ஒரு முத்தலைச் சூலம் தோன்ற முனிவர்கள் விடுப்பச் சிவபெருமான் முன் சென்றது. அவர் அதனைப் பற்றி கரத்திலே ஏந்தி நீ நம்முடைய படையாவாய் எனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணித்தார். பின் ஓமகுண்டத்தில் ஒரு மான்கன்று ஒன்று தோன்றியது. முனிவர்கள் அதனை சிவபெருமான்மீது திருப்ப அது ஆகாயத்தில் எழுந்து பாய்ந்து உயிர்களை அழித்தது. அதனால் சிவபெருமான் உயிர்களைக் காப்பதற்கு விரைந்தழைத்து என்னுடைய காதுக்கணித்தாய் நிற்குமாறு அருள் செய்து இடக்கரத்தில் ஏந்தி நின்றார். பின் யாகத்தில் இருந்து தோன்றிய சர்ப்பங்களை சிவபெருமான் ஆபரணங்களாகத் தரித்துக் கொண்டார். அதன்பின் வந்த பூத சேனைகள் சிவபெருமானிடம் செல்ல அவற்றை நோக்கி நீங்கள் எமது சேனைகளாகக் கடவீர் என்று கட்டளையிட்டார்.

அதன்பின் அவ் வேள்வித்தீயில் வெண்டலை ஒன்று தோன்றி உலகம் யாவும் தொலையும்படி கொண்டெழுந்தது. அது அணுகுதலும் அவர் அதனால் உலகம் அழியா வண்ணம் அருள்செய்து திருக்கரத்திலே ஏந்தி சடையிலே தரித்துக்கொண்டார். மனம் குலைந்த முனிவர்கள் தங்கள் மந்திரங்களை ஒன்றாக ஏவி இவரைக் கொல்லுங்கள் என்று கூறினார்கள். அவைகள் ஒரு டமருக வடிவமாகி புவனங்கள் செவிடாகும்படி ஒலித்துக் கொண்டு அவரை அணுகின. சிவபெருமான் அவ் உடுக்கை ஒரு திருக்கரத்தில் பற்றி நம்முடைய காதின் அருகே ஒலித்துக்கொண்டிருக்குதி என்று ஏந்தி நின்றார். பின்னும் அபிசாரஹோமம் செய்தார்கள். அந்த யாக அக்கினியில் இருந்து முயலகன் எழுந்தது. அதனை சிவபெருமான் அந்த யாக அக்கினியை ஒரு திருக்கரத்திலேந்தி முயலகனை மெல்லவாக திருவடியால் வீழ்த்தித் தள்ளி அதன் முதுகின்மேல் ஊன்றிக்கொண்டு தேவர்கள் துதிக்க நின்றார்.

அந்தோ நாம் யாகம் செய்து அதில் இருந்து வந்ததெல்லாம் அழிந்துவிட்டனவே என்று துயரமிட்டு பின்பும் சிவன் அழிக என்று எண்ணில்லாத சாபங்களையும் சொன்னார்கள். அந்த சாபங்கள் யாவும் அவர்முன் செல்லவில்லை. முனிவர்கள் தாம்கொண்ட கோபமும் நீங்கி வலி குறைந்து வாட்டமும் நாணமும் கொண்டு தொலையாத பாவமும் பூண்டு வாளா நின்றார்கள். அது நிற்க சிவபெருமான் திருவடியிலூன்றிய முயலகன் மெல்ல தலையை எடுத்தசைய அவர் அதன்மேல் நின்று அநவரத தாண்டவஞ் செய்தல்போல் அதன்மேல் நின்று நடித்தார். அதனை தாங்கலாது உலகமெலாம் நடுங்கின. வனத்து இருடிகள் நடுங்கினர். பிரம விஷ்ணு தரிசித்து துதித்து அவருக்கு பக்கத்தில் நின்றார்கள். சிவபெருமான் தம்மை மதியாத முனிவர் யாவருக்கும் ஞானத்தைக் கொடுத்து அருளினார். அவர்கள் விரைவில் எழுந்து எம்பெருமானே பொல்லாத பாவங்களையே செய்தோம். எங்களைப் பொறுத்தருளும் என்று சொல்லி அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள்.

பகைவர்களுக்கும் திருவருள் புரியும் சிவபெருமான் அம் முனிவர்களை நோக்கி நம்முடைய வேதாகம நெறியில் ஒழுகிப் பாவங்களை நீக்கி தவம் செய்யச் சொன்னார். பின் அரிபிரமேந்திராதி தேவர்கள் யாவரையும் அவர் அவர் இடங்களுக்கு செல்லும்படி விடை கொடுத்து தாம் திருக்கைலாச மலையை அடைந்து உமாதேவியாரோடு வீற்றிருந்து அருளினார்.

அன்பின்றி இறைவனை உணரமுடியாது என்பதை தாருகாவனத்து முனிவர்கள் மூலம் நாங்கள் உணர்ந்தோம். ஆம் இறைவனை அடையத் தேவையானது உண்மையான அன்பே.

*நல்ல நம்பிக்கையில் உருவாகும் கருத்துக்கள் என்றுமே அழிவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# சித்தர் பூமி

–திரு கு. சிவபாலராஜா அவர்கள்–

சித்தர்களைப்பற்றி அவர்கள் யார் என்பது பற்றித் திருமூலர் தரும் விளக்கம் வருமாறு.

யோகச் சமாதியின் உள்ளே அகலிடம்
யோகச் சமாதியின் உள்ளே உளரொளி
யோகச் சமாதியின் உள்ளே உளசத்தி
யோகச் சமாதி உகந்தவர் சித்தரே.
-திருமந்திரம்.

சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்
சுத்தா சுத்தத்துடன் தோய்ந்துந் தோயாதவர்
முத்தரம் முத்திக்கு மூலத்தர் மூலத்துச்
சத்தர் சதாசிவத் தன்மையர் தாமே.

குதம்பைச் சித்தர் பாடிய தத்துவப் பாடல்களில் சில வருமாறு.

கொல்லா விரதம் குளிர் பசி நீக்குதல்
நல்ல விரதமடி - குதம்பாய்
நல்ல விரதமடி.

"குதம்பை" என்பது பெண்கள் தமது காதில் அணியும் ஓர் ஆபரணம். இவர் பாடியவை முப்பத்திரெண்டு பாடல்கள், பதினென் சித்தர்கள் ஞானக்கோவையில் உள்ளன. அவற்றுட் சில வருமாறு.

வெண்காய முண்டு மிளகுண்டு சுக்குண்டு
உண் காயம் ஏதுக்கடி குதம்பாய்
உண் காயம் ஏதுக்கடி?

"உண்காயம்" என்பது எமது உணவைக் குறித்துள்ளது. வெண்காயம், மிளகு, சுக்கு இம் மூன்றையும் தினமும் சாப்பிடுபவனுக்கு வேறு உணவு எதுவும் தேவைப்படாது. ஆரோக்கியம் பேணப்படும்.

மாங்காய்ப் பால் உண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி? குதம்பாய்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி?

மேலுள்ள சித்தர் பாடல் யோகப் பயிற்சியினால் அடையும் பயன்களைக் கூறியுள்ளது. அது நமது உடம்பில் நடப்பது.

சுறுசுறுப்புடன் செயற்படுகிறவனுக்குத்தான் இந்த உலகம் சொந்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர்கள் அணிமா, லகிமா முதலிய அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவர்கள். யோகப் பயிற்சியினால் தமது மூச்சினை அடக்கி ஆறு ஆதாரங்களிலும் மனத்தை நிறுத்திச் சித்தி எய்திய சிறப்பு சித்தர்களுக்கு உண்டு. சித்தர்களின் இயல்பை சிவஞான சித்தியார் பாடல் பின்வருமாறு விளக்கியுள்ளது.

ஞாலமதில் ஞானநிட்டை யுடையோருக்கு
நன்மையொடு, தீமையில்லை நாடுவதொன்றில்லைச்
சீலமிலைத் தவமில்லை விரதமோடாச் சிரமச்
செயலில்லைத் தியானமிலைச் சித்தமலம் இல்லை
கோலமிலைப் புலனில்லைக் கரணம் இல்லை
குணமில்லைக் குறியில்லைக் குலமும் இல்லை
பாலருடன் உன்மத்தர் பிசாசர் குணம் மருவிப்
பாடலினோ பாடலிவை பயின்றிடினும் பயில்வர்.

சித்துக்கள் அறுபத்துநான்கு வகைப்படும் என சில சித்தர்கள் கூறியுள்ளனர். ஞான வெட்டியான் பாடல் வரிகள் இக் கூற்றினை உறுதிசெய்கின்றன.

"சித்தர்களின் சித்து அறுபத்து நாலு"
-ஞான வெட்டியான்.

மேலும், திருவிளையாடற்புராணத்தில் "எல்லாம் வல்ல சித்தரான படலம், அட்டமா சித்துப் படலம்" ஆகிய பகுதிகள் பல்வேறு சித்துக்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன. இராமலிங்க சுவாமிகள் சித்துக்களை முப் பெரும் பிரிவுக்குள் அடக்கிக் கூறியுள்ளார். அவை கரும சித்தி, யோக சித்தி, ஞான சித்தி என்பன. அறுபத்துநான்கு சித்துக்களை "யோக சித்தி" என்னும் பிரிவிற்குள் அடக்கியுள்ளார். சித்துக்களின் எண்ணிக்கை பல கோடி என்றும் கூறப்படுகிறது. சித்துக்களின் எண்ணிக்கை வேறுபட்டாலும் அதன் பொருள் வேறுபடவில்லை.

சித்த வைத்திய முறைமைகள் சித்தர்களின் வைத்திய முறையாகும். எவ்விதமான கருவிகளோ ஆய்வுகூடங்களோ இல்லாமல், மனித உடலின் பல்வேறு உறுப்புக்களின் இயல்பு, அமைப்பு, இயக்கம் பற்றியும் அவையுறும் நோய்கள் பற்றியும், அந் நோய்களுக்கான தீர்வு மருந்துகளையும் சித்தர்கள் அறிந்திருந்தனர். இடைவிடாத யோகப் பயிற்சியினால் பலவகைச் சித்துக்களை அடையலாம் என யோக நூல்கள் (திருமந்திரம்) கூறியுள்ளன.

சித்தர்களின் குறிக்கோள் இறைவனை அடைவதே. சித்து விளையாட்டுக்கள் அவர்களின் பொழுதுபோக்குச் செயல்கள் போன்றனவே. இறைவனின் இயல்போடு இரண்டறக் கலப்பதுவே சித்தர்களின் குறிக்கோளாகும். அவ்வாறு கலப்பதற்கு இச் சித்துக்கள் அவர் களுக்கு ஓர் படிக்கல் போன்றே அமைந்துள்ளது. ஆயிரக் கணக்கில் அமைந்த சித்துக்களை சித்தர்கள் அறிந்திருந்தாலும் சித்து விளையாடக்கூடாது என்றே சித்தர் கருதுவர். யோக நெறி எல்லாம் பயின்றிருந்தாலும் சித்தர்கள் உலகில் சித்து விளையாடக்கூடாது என்றே சித்தர்கள் கருதுவர். இதுபற்றி சுப்பிரமணிய ஞானம் என்னும் நூலில் பின்வரும் அடிகள் கூறப்பட்டுள்ளன.

*காத்துக்கொண்டிருப்பவனுக்குக் காலம் ஒவ்வொரு கதவையும் திறக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவாய் சரமாறி இருந்திட்டாலும்
நலமான யோகமெலாம் அறிந்திட்டாலும்
கூடுவாய் தில்லையிலே கூடினாலும்
குவலயத்தில் சித்து விளையாடா தென்றே.

-சுப்பிரமணிய ஞானம்.

நெற்றிப் புருவ நடு சிற்றம்பலம் என்றும், தில்லை என்றும் இங்கு வர்ணிக்கப்பட்டுள்ளது. மரணமிலாப் பெரு வாழ்வே சித்தர்கள் எதிர்பார்க்கும் மகிழ்ச்சிக்குரிய பேரின்ப நிலையாகும். தாயுமானவர் தனது பாடலில் பதினொரு வகையான சித்துக்களைக் கூறி அவற்றைப் பெற்றாலும், சிந்தையை அடக்கிச் "சும்மா" இருப்பது அரிது என்று அப்பாடலை முடித்துள்ளார். சித்தர் நிலை ஆன்மப் பயணத்தின் இறுதிநிலை. சிந்தையடக்கிச் சும்மா இருக்கும் நிலையை அடைந்தவர்கள் சித்தர்கள் என்று கூறுவது பொருத்தமுடையது எனத் தோன்றுகின்றது.

திருமூலதேவ நாயனார் காலத்தில் தென்னகத்தில் வாழ்ந்தவர் அகத்தியர். அகத்தியரைச் சந்திக்கும் நோக்குடன் தென்னகம் நோக்கி நடந்த திருமூலர் "திருவாவடுதுறை" என்னும் இடத்தில் உமையம்மையால் பசுக்கள் வடிவத்தில் தடுத்தாட்கொள்ளப்பட்டு திருமூலர் என்னும் பெயர் பெற்றார் என்பது திருமூலர் வரலாறு கூறும் செய்தியாகும். திருமூலருக்கு முன்னைய பெயர் "சுந்தரநாதன்" என்பதாகும். இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள "மூதூர்" என்னும் ஊரில் உள்ள "கங்குவேலி" என்னும் கானகத்தால் சூழப்பட்டுள்ளதோர் கிராமத்தில் அகத்தியருக்கு ஓர் சிறு கோயில் உண்டு. அக் கோயிலை தற்காலத்திலும் காணலாம். அக் கோயிலில் பூசைகளும் நடைபெறுவதாகக் கூறப்பட்டுள்ளது. அகத்தியரும் ஓர் சித்தர் எனப்பட்டுள்ளது. அகத்தியர் இயற்றிய "அகத்திய ஞானம்" என்னும் நூலில் உள்ள பின்வரும் பாடல் சமூகத்தில் சித்தர் கருத்துக்களைத் தெரிவிக்கின்றது. (அகத்தியர் என்னும் பெயரில் பலர் வாழ்ந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.)

மனமது செம்மையானால் மந்திரஞ் செபிக்க வேண்டா,
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டா
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா
மனமது செம்மையானால் மந்திரஞ் செம்மையாமே.

-அகத்தியர் ஞானம்.

அகத்தியர் செய்த சித்தவைத்தியம் பற்றிய நூல்கள் பிரதானமானவை. சித்த வைத்தியம் பிரதானமான பணி எனப்பட்டது. அகத்தியரின் "சமரசநிலை ஞானம்" மனிதனின் நரம்பு முடிச்சுக்கள் பற்றி விளக்கியுள்ளது. "அகத்தியர் ஐந்து சாஸ்திரங்கள்" என்னும் நூல் ஓர் கிரிகை நூலாகும். இந்நூலில் பதினெட்டு வகையான மன நோய்கள் பற்றியும், அவற்றின் இயல்புகள் பற்றியும், மருத்துவ முறைகள் பற்றியும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. "அகத்தியர் அட்டமாசித்து" என்னும் நூலில் குழந்தை தோஷங்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளது. மேலும் பல நூல்களை அகத்தியர் செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம் நடராஜர் சந்நிதியில் உள்ள ஸ்ரீமூலர் சந்நிதியிலுள்ள இலிங்கம் சுயம்புவாகத் தோன்றியது என்று கூறப்படுகின்றது. இங்கு பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாத முனிவர் ஆகியோரின் சிலை வடிவங்களும் எழுந்தருளியுள்ளன. திருமூலர் சமாதியடைந்த இடம் சிதம்பரம்.

மன ஒருமைப்பாட்டின் இறுதிநிலை சமாதி எனப்படும். பக்குவப்பட்ட ஆன்மா பூரணத்தில் கலந்து ஒன்றாகிவிட்ட நிலை சமாதி எனலாம். சமாதி நிலையை யாராலும் வர்ணிக்க முடியாது. சமாதிநிலையை மொழியால் முழுமையாகக் கூறமுடியாது. சமாதி நிலையில் இருப்பவரும் சமாதிநிலையை விபரிக்க முடியாது.

திருமூலர் அருளிய திருமந்திரத்தில் சித்தர்களின் இயல்பு பற்றிக் கூறப்பட்டவற்றை நோக்குவோம்.

வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்
தெளியு மவரே சிவ சித்தர் தாமே.

-திருமந்திரம்.

மேலுள்ள பாடலில் ஆன்மா, சிவன் விளங்கும் சிதாகாயப் பெருவெளியில் கலக்கின்ற விதத்தையும், சிவனது இச்சையில் ஆன்மாவின் இச்சை அடங்கிய விதத்தையும், சிவ ஒளியில் ஆன்ம ஒளி ஒடுங்கிய விதத்தையும் அறிவில் தெளிந்து கண்டவரே சிவ சித்தர் ஆவார்.

சித்தர்களின் நிலையை விளக்கிச் சொல்வது எவ்வாறு என்பதைச் சிந்தித்தோம். நாதாந்த நிலையிலுள்ள சித்தர்கள் சிவ உலகத்தைத் தம்முள் யோக நிலையில் கண்டவர்கள். அவர்கள் தம்முள்ளே சிவனுடன் சேர்ந்து இருப்பதையும் எய்தியவர்கள். அவர்களே சிவபோகமான பேரின்பத்தைத் தம்முள் கண்டு அனுபவிப்பவர். எனவே, நிலைமை இப்படி இருக்கையில் சித்தர்களது நிலையை அதுபற்றிய அறிவு, அனுபவமில்லாதவர் எடுத்துக் கூறுவது எப்படி முடியும்? முடியாது என்பதே விடையாகும். அதன் திருமந்திரம் வருமாறு.

தூங்கிக் கண்டார்சிவ லோகமும் தம் உள்ளே
தூங்கிக் கண்டார் சிவ யோகமும் தம் உள்ளே
தூங்கிக் கண்டார் சிவ போகமும் தம் உள்ளே
தூங்கிக் கண்டார் நிலை சொல்வ தெவ்வாறே.

-திருமந்திரம்.

நாதம் என்பது முப்பத்தாறாவது தத்துவம். அதையும் கடந்த நிலையே நாத முடிவாகும். நாத முடிவே நாதாந்தம் ஆகும். மேற்பாடலில் தூக்கம் என்றது சும்மா இருக்கும் நிலையைக் குறித்துள்ளது. சித்தர்கள் தம்முள்ளேயே சிவனைக் காணும் பேறுபெற்றவர்களாவர்.

(முற்றும்)

*நீ நல்ல நண்பனை அடைய விரும்பினால் நீயும் நல்லவனாக இருக்க வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்கை

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

எமது வாழ்க்கைக்கு நீர் எத்துணை அவசியமோ அத்துணை அவசியம் இறை வணக்கம். எமது ஆன்மீக முன்னேற்றத்துக்கு இறைவழிபாட்டை பல மார்க்கங்களில் நாம் செய்து வருகின்றோம். எமது முன்னோரும் அவ்வாறு செய்து வந்துள்ளார்கள். நாயன்மார் காலத்திலே தலயாத்திரை சிறந்ததோர் வழிபாட்டு முறையாக இருந்து வந்தது. சமய குரவர்கள் சிவபெருமானது தலங்கள்தோறும் சென்று தேவாரப் பதிகங்கள் பாடி பொது மக்களுக்காகப் பல அற்புதங்களைச் செய்து பக்தி இயக்கத்தைப் பரப்பி வந்தமை யாம் அறிந்ததே. இத் தலயாத்திரையின்போது அடியார்கள் கூட்டமும் இவர்களைத் தொடர்ந்து பண்ணிசை பாடித் தமது வழிபாட்டை ஆற்றினர்.

தல யாத்திரையோடு தீர்த்தமாடுதலும் சைவப் பெருமக்களிடையே மிகுந்த முக்கியத்துவமும் புனித பயனுள்ள வழிபாட்டு முறையாகவும் இருந்து வந்தது.

எமது நாட்டில் கீரிமலை, செல்வச்சந்நிதி தொண்டமான் ஆறு, கதிர்காமம் மாணிக்க கங்கை ஆகியவை தீர்த்தங்களுக்குரிய புனித ஆறுகளாகக் கொள்ளப்பட்டு வருகின்றன.

கங்கை என்றால் நீர் என்று கொள்ளலாம். எம் பெருமான் கங்கா நதியை தனது சடாமுடியிலே சூடி அதன் வேகத்தைத் தணித்து மீண்டும் அதனைப் பூமியில் பாய விட்டுள்ளார் என்பது புராண வரலாறு.

கங்கை இந்தியாவின் மிகப்பெரிய நதியாகும் உலகத்தில் உள்ள மிகப்பெரிய நதிகளில் கங்கையும் ஒன்றாகும். அருட் சக்திக்கும் புனிதத்துவத்துக்கும் பெயர்போன புனித நதி. இந்துக்கள் கங்கையைப் புனித ஆறு எனக் கொள்கின்றனர். எமது நாட்டிலே இடம்பெறும் ஆலய கும்பாவிஷேடங்களுக்கு கங்கா நதியிலிருந்து புனித தீர்த்தம் எடுத்துவரப்பெற்று இங்கு ஆலய தீர்த்தத்தோடு கலக்கப்பெற்று அபிடேகம் இடம்பெறுவதை யாம் அறிவோம். தென் இமயத்தில் தோன்றும் காங்கோத்திரி என்னும் இடத்திலிருந்து ஊற்றெடுக்கும் பாகீரதி, ஜான்ஹவி, அழக நந்தா ஆகிய ஆறுகளின் சங்கமமே கங்கை நதி ஆகும்.

புராணங்களில் ஆறுகள் தெய்வத்தன்மை உடையனவாகப் போற்றப்படுகின்றன. உலக நாடு முழுவதுமே போற்றும் கங்கை நதி இந்து மதத்தின் உயிர்நிலை போன்றது. பாவங்கள் அனைத்தையும் போக்கவல்லது. நதிகள் யாவற்றிற்கும் பிரதிநிதியாக விளங்குவது கங்கை. இதனால் எல்லா மங்கல ஸ்நானமுமே கங்கா ஸ்நானம் எனப் பெயர் பெறுகின்றது. இந்துக்கள் எந்தப் புனித நீரையும் கங்காமிர்தம் என்றே கூறுவார்கள். கங்கை தேவநதி எனவும் பெயர் பெறுகின்றது.

*வெற்றியின் அடிப்படை எடுத்த செயலில் நிலையாக நிற்பதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராண வரலாற்றின்படி கங்கை முதலில் தேவ உலகத்திலேயே இருந்தது. இமய மலையின் புத்திரியாகக் கருதப்பட்ட கங்கையை ஆற்றல் மிக்க பகீரத மன்னனே தனது மூதாதையர் கடைத்தேறும் பொருட்டு தனது தவ பலத்தால் பூமிக்குக் கொண்டு வந்தான். இதனால் கங்கை பகீரதி என்றும் அழைக்கப்படுகின்றது.

வானிலிருந்து பூமிக்குப் பாய்ந்த கங்கையின் வேகத்தை தாங்க முடியாது என அறிந்த பகீரதன் அதன் வேகத்தை தடுக்கும்படி சிவபெருமானை நோக்கித் தவம் ஆற்றினான். சிவனும் அவனது வேண்டுகோளின்படி கங்கையைத் தன் சடாமுடியில் தாங்கி அதன் வேகத்தை அடக்கி அதை ஏழு அருவிகளாகப் பூமியிலே பாயவிட்டார். அவையாவன ஹலாதினி, பவானி, நளினி, சுரஸிஸ், சீதா, சிந்து, பகீரதி என்பனவாம். இவற்றுள் தெற்கே பாய்ந்த கங்கையின் அருவியே பகீரதி ஆகும்.

கங்கா நதி பாய்ந்ததால் ஏற்பட்ட புனித தலங்கள் பல. அவற்றுள் கங்காத்துவாரமும் ஹரித்துவாரமும் காசியும் அதி முக்கியம் வாய்ந்தவை. அத்தோடு கங்கையும் யமுனையும் சங்கமமாகும் நிலையும் வாய்ந்தது.

எனவே, இந்தியாவுக்கு யாத்திரை செய்யும் சந்தர்ப்பம் எமக்கும் கிடைக்குமானால், யாமும் கங்கையில் நீராடி புனிதம் பெறலாமே!

---

## நல்ல சொத்து

ஒரு ஊரில் பெரிய பணக்காரர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒருநாள் தன்னுடைய வீட்டிற்கு அவரது குருவை அழைத்து வந்தார். பணக்காரரின் வீடு மிகவும் பெரியது. இருவரும் அவருடைய வீட்டின் மொட்டை மாடியில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் குருவே, இந்த வடக்குப் பக்கத்தில் இருந்து தூரத்தில் ஒரு பனைமரம் தெரிகிறதே, அதுவரை என்னுடைய நிலம் உள்ளது. அதேபோல் இதோ இந்த தெற்குப் பக்கத்தில் ஒரு மாமரம் தெரிகிறதே அது வரையிலும் என்னுடைய இடம்தான். வீட்டுக்கு எதிரில் உள்ள கிழக்குப் பக்கத்தில் தெரிவது முழுவதும் என்னுடையதுதான் என்று தன் வீட்டைச் சுற்றியுள்ள இடங்களைக் காட்டினார். இவ்வளவு சொத்துக்கள் எல்லாவற்றையும் நான் என் கடின உழைப்பால் சம்பாதித்தவைகள். எனக்கு இவ்வளவு வசதிகள் இருந்தும் எனக்கு மன நிம்மதி இல்லாமல் இருக்கிறது என்று குருவிடம் கூறினார்.

குரு அவரை அமைதியாகப் பார்த்துவிட்டு அவரிடம் எல்லா இடங்களிலேயும் சொத்து சேகரித்து வைத்திருக்கிறாய். உன் உள்ளத்தில் சொத்து சேர்த்து வைத்திருக்கிறாயா? என்று கேட்டார். குரு கேட்பது பணக்காரருக்கு புரியவில்லை.

உடனே அந்தக் குரு அவரிடம் அன்பு, பாசம், நட்பு போன்ற நல்ல சொத்துக்களை உன் உள்ளத்தில் சேர்க்க வேண்டும். அதுதான் மன நிம்மதியை உனக்கு தரும் என்றார். அப்போதுதான் அந்தப் பணக்காரருக்குப் புரிந்தது.

அநேக உண்மைகள் வேடிக்கைப் பேச்சிலே வெளியாகி விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபக்தி

– திரு R.V. கந்தசாமி அவர்கள் –

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று கூறிய பெரியோர்கள் தந்தை, தாய், குரு என வரிசைப்படுத்தியதன்மூலம் ஆசிரியரை மூன்றாவது நிலையில் வைத்துப் போற்றுமாறும், எழுத்தறிவித்தவன் இறைவன் என்றும் கூறியுள்ளார். குரு, உபாத்தியாயர், ஆசிரியர், ஆசான் முதலிய பல்வேறு பெயர்களால் ஆசிரியர் அழைக்கப்படுகின்றார். அவரை வாழும் சமூகம் உயர்நிலையில் வைத்துப் பூசிக்கின்றது. நல்லாசிரியரின் இலக் கணங்களை நன்னூலாசிரியர் தெளிவுபட எடுத்துரைத்துள்ளார். எந்த வித்தையைக் கற்றுக் கொடுத்தாலும் அவர்கள் ஆசிரியர்களே என்பதும் "குருவில்லாத வித்தை பாழ்" எனக் கூறுவதும் நாமறிந்தவைகளே. ஆசு+இரியன் என்பதன் பொருள் குற்றம் களைபவன் என்பதாகும். முற்காலத்தில் பாடசாலை என்ற அமைப்பு உருவாகவில்லை. கல்வியைப் பெறுவதற்குக் குருவினை நாடிச்சென்று, அவருடன் உடனுறைந்து, அவருக்குப் பணிவிடைகள் செய்து நாளிலும் பொழுதிலும் குரு - சீட முறையிற் கற்க வேண்டியிருந்தது. குருவும் தன்னிடம் வரும் மாணவர்களுள் தகுதியும் பக்குவமும் உள்ளவர்களையே தேர்ந்தெடுத்துச் சீடர்களாக ஏற்றுக்கொண்டு கல்வியறிவு ஊட்டுவார். குருவின் முன்னால் எந்த அந்தஸ்து உள்ளவராயினும் சமம்தான். ஆசிரியருக்கும் மாணவருக்குமான உறவு புனிதமானது. ஆசிரியரின் வாக்கு வேதவாக்கு. இவையெல்லாம் இன்றைய உலகில் பொய்யாய்ப் பழங் கதையாய்ப் போய்விட்டனபோல் தெரிகிறது.

"எழுத்தறியத் தீரும் இழிதகைமை, தீர்ந்தோன் மொழித்திறன் முட்டறுப்பான் ஆகும். மொழித்திறத்தின் முட்டறுத்து - முதனூற் பொருளுணர்ந்த நல்லோன் கட்டறுத்து வீடுபெறும் என்பது தொல்காப்பிய சூத்திர விருத்திப் பாடலாகும். இதன்மூலம் கல்வியறிவானது, முத்தியின்பத்தைத் தரும் எனப்படுகிறது. இதனாலேயே ஆசிரியன் தெய்வம் போன்று கருதப்பட்டான். தனது மாணாக்கரின் நன்மையை நாடிச் செயற்பட்டான். சுயநலமற்றுப் பொதுநலத்தோடு கல்விப்பணியைக் கடவுட் பணியாகச் செய்தான். கடினமான பயிற்சிகளினூடு குருவிடம் கற்றுத்தேறிய மாணவர்கள் புடம்போட்ட தங்கமாகப் பிரகாசித்தார்கள். எமது இதிகாச, புராணங்கள் குரு பக்தியின் மேன்மையினைப் பல கதைகள்மூலம் விளக்கியுள்ளன. வெகுசன இலக்கியங்களாக இவை திகழ்ந்துள்ளன. துரோணாச்சாரியாருக்குத் தனது கட்டைவிரலைத் துண்டித்துக் குரு தட்சணையாகக் கொடுத்தான் மகாபாரதத்து ஏகலைவன்.

உபமன்யு என்பவனின் கதை மிகவும் பக்திபூர்வமானது. அவனது குருவாக விளங்கியவர் சுயோதநிகம்பர் என்பவர். மாணவரான உபமன்யு யாசகத்தினால் ஈட்டிவரும் பொருட்களைத் தன் குருவிடம் அப்படியே கொண்டுவந்து கொடுப்பான். குருவோ அவனுக்கு எதுவும் உண்ணக் கொடுக்கமாட்டார். ஆனாலும் அவன் உடல் தளரவில்லை. அதற்கான

*அரிய காரியங்கள் பெரிய உழைப்பின்றி ஒருபோதும் முடிந்ததில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தைக் குரு கேட்டார். அதற்கு உபமன்யு நான் இரண்டாம் முறை யாசகம் செய்து சாப்பிடுகிறேன் என்றான். அப்படிச் செய்யக்கூடாது எனக் குரு தடுத்தார். அதன் பின்னரும் அவனது உடல் தளர்வின்றி ஆரோக்கியமாகக் காணப்பட்டது. மீண்டும் காரணத்தைக் குரு கேட்க, உபமன்யுவும் பசுக்களின் பாலைக் கறந்து குடிக்கிறேன் என்றான். அதையும் குரு தடுத்துவிட்டார். பின்னரும் அவனுடல் தளராமை கண்டு குரு காரணம் கேட்க அவனோ கன்றுக்குட்டிகளின் கடைவாயிலிருந்து வரும் நுரையைச் சாப்பிடுவதாகக் கூறினான். அதனையும் குரு தடுத்துவிட அவனும் காட்டிலுள்ள எருக்கலம் இலைகளைச் சாப்பிட்டான். அதனால் அவனது இரு கண்களும் பார்வையிழந்து விட்டன. எதிர்பாராத விதமாக ஒருநாள் நீர் வற்றிய குளத்தில் குருடனான உபமன்யு விழுந்துவிட்டான்.

மறுநாள் உபமன்யுவைக் காணாத குரு, சில மாணவர்களையும் அழைத்துக்கொண்டு கவலையுடன் தேடிச் சென்றார். "உபமன்யு நீ எங்கிருக்கிறாய்?" எனப் பெருங் கூக்குரலிட்டார். நான் இவ்விடம் ஒரு கிணற்றில் வீழ்ந்துவிட்டேன். எருக்கலமிலைகளைச் சாப்பிட்டமையால் எனது பார்வை போய்விட்டது என்றான் உபமன்யு. உடனே குருவானவர் தேவர்களின் வைத்தியர்களான அஸ்வினி குமாரர்கள்மீது துதியொன்றினைப் பாடவும் அவர்கள் உபமன்யுமுன் தோன்றி ஒருவித அதிரசத்தை உண்ணக்கொடுத்து இதைச் சாப்பிட்டவுடன் உன் கண்கள் குணமாகிப் பார்வை கிடைத்துவிடும் என்றனர். அத்தகைய நிலையிலும் உபமன்யு "என் குருநாதருக்கு சமர்ப்பணஞ் செய்யாது எதனையும் உண்ணமாட்டேன்" எனப் பிடிவாதஞ் செய்தான். அவனது குருபக்தியின் மேன்மையைக் கண்ட அஸ்வினி குமாரர்கள் அவனுக்கு கண் பார்வையைக் கொடுத்ததுமல்லாமல் அவனைக் கிணற்றிலிருந்தும் வெளியே எடுத்துவிட்டனர். குருவும் அவனுடைய குருபக்தியின் வலிமைகண்டு வியந்து அருள்பாலிக்க உபமன்யுவோ கற்காமலேயே சகல வித்தைகளிலும் சிறந்தவனானான்.

இந்தக் கதையானது உபமன்யுவின் மனோவலிமையை உணர்த்தி நிற்கிறது. சோதனை செய்த குருவே அவனின் சாதனைகளுக்குத் துணை நின்றார். எனவே ஆசிரியர் என்பவர் மாணவர்களின் வாழ்வின் நலம் நாடிச் செயற்படுபவர்களாக விளங்குதல் அவசியம். ஆசிரியனின் அறிவொளியினால் உலகம் பிரகாசிக்க வேண்டும். இன்று பாலர் வகுப்பு தொடக்கம் பல்கலைக் கழகம் வரையில் ஆசிரியரின் பணி விரிந்து கிடக்கிறது. அவனை மனிதனாக, மாண்புடையவனாக, சமூக நலன்விரும்பியாக மாற்றும் வல்லமை ஆசிரியருடையதாகிறது.

நல்லதோர் ஆசானை எக்காலத்திலும் மாணவன் மறக்கமாட்டான். இன்றைய கால கட்டத்தில் புனிதமான ஆசிரியத்துவத்திலிருந்து பலர் வழுவிவிடுகின்றனர். மாணவர்களும் அவர்களை மதித்து நடக்கத் தவறிவிடுகின்றனர். ஆசிரியரின் தன்னலமற்ற சேவை, ஒரு சமூகத்தை, சமுதாயத்தை, தேசத்தை முழு உலகினைக் கல்வியறிவிலும் பண்பாட்டறிவிலும், மனித மேம்பாட்டிலும் உயரச் செய்கிறது. ஆசிரியர் எப்பொழுதும் கற்பவராக இருத்தல் வேண்டும் என்பார் டாக்டர் இராதாகிருஷ்ணன். எரியும் மெழுகுவர்த்தியினாற்றான் ஆயிரம் தீபங்களை ஏற்றிவைக்க முடியும் என்பார் பிளாட்டோ. சமூகத்திற் காணப்படும் பல்துறையாளர்களையும் ஏதோவொரு வகையில் ஆசிரியரே உருவாக்குகின்றார். ஆசிரியப்பணி எல்லை கடந்தது.

*குறைகளைக் கண்டு திருத்திக்கொள்பவனே திறமையானவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே பண்பு, அன்பு, பக்தி, கருணை, பணி, செய்நன்றியுணர்வு, பகுத்தறிவு, தேசப்பற்று ஆகிய பண்புடையவர்களாகத் தாம் விளங்குவதோடு தமது மாணவர்களையும் அத்தகையவர்களாக உருவாக்குவதே ஆசிரியரின் மேலான கடமை எனலாம். குருபக்தியுடன் செயற்படுவதே மாணவரின் மேலான கடமை எனலாம்.

## வறியவருக்கு உதவுதல்

ஒரு ஊரில் பணக்காரர் ஒருவர் வாழ்ந்து வந்தார். ஆனால் அவர் பணக்காரனாக இருந்தும் கஞ்சனாக இருந்தார். ஒரு ரூபாயைக்கூட யாருக்கும் தரமாட்டார். ஆனாலும் அவருக்கு சொர்க்கத்திற்கு செல்ல வேண்டும் என்ற ஆசையை நிறைவேற்றிக்கொள்ள துறவி ஒருவரை சந்திக்கச் சென்றார். துறவியிடம் சென்று நான் சொர்க்கத்தை அடைய ஆசைப்படுகிறேன். அதை அடைவதற்கு வழி ஏதேனும் இருந்தால் சொல்லுங்களேன் என்று வேண்டினார்.

அதற்கு அந்த துறவி அவரிடம் யாருக்கும் அநியாயம் செய்யாமல் தர்மம் செய் என்று கூறினார். ஆனால் அவருக்கோ தன்னிடம் இருக்கும் செல்வத்தை செலவு செய்ய மனம் வரவில்லை. அதே சமயம் சொர்க்கத்திற்கு செல்ல வேண்டும் என்ற ஆசையையும் விடமுடியவில்லை. அதனால் நாள்தோறும் ஒரு ஏழைக்கு ஒருபிடி அரிசி மட்டும் தருவோம். அப்படி தருவதனால் நம் செல்வமும் குறையாது. நமக்கு சொர்க்கமும் கிடைக்கும் என்று முடிவு செய்தார். அதன்படி தினமும் ஒரு ஏழைக்கு ஒருபிடி அரிசி தானம் தந்தார். மாதங்கள் சென்றன.

மீண்டும் அந்த ஊருக்கு அந்த துறவி வந்தார். அவர் வந்திருப்பதை அறிந்த அவர் அந்த துறவியைக் காணச் சென்றார். அந்த துறவி ஒரு மரத்தின் அடியில் அமர்ந்திருந்தார். துறவியைப் பார்த்த அந்த பணக்காரன் அவரை வணங்கினார். அவரை வணங்கிவிட்டு, துறவியிடம் ஐயா! தாங்கள் கூறியதுபோலவே நான் தினமும் ஒரு ஏழைக்கு ஒருபிடி அரிசி தானம் கொடுத்துக்கொண்டு வருகிறேன். அதனால் எனக்கு உறுதியாக சொர்க்கம் கிடைக்கும் அல்லவா? என்று கேட்டார்.

அதற்கு அந்த துறவி ஒன்றும் பேசாமல் தம் அருகில் இருந்த மரத்தின் அடிப்பகுதியை தன் விரல் நகத்தால் கீறத் துவங்கினார். அந்தப் பணக்காரரும் நீண்ட நேரம் பொறுமையோடு அங்கேயே காத்திருந்தார். பொறுமை இழந்த அந்தப் பணக்காரன் துறவியைப் பார்த்து, ஐயா! நான் கேட்டதற்கு தாங்கள் ஏதும் பதில் சொல்லாமல் நீண்டநேரமாக இந்த மரத்தை நகத்தால் கீறிக்கொண்டே இருக்கிறீர்களே! என்று கேட்டார்.

அதற்கு அந்த துறவி, அந்த பணக்காரரிடம் நான் இந்த மரத்தை என் நகத்தால் வெட்டிக்கொண்டிருக்கிறேன் என்றார். இதை நான் வெட்டி முடிக்கும்வரை அமைதியாக இரு என்று கூறினார். இதைக்கேட்ட செல்வந்தனுக்கு சிரிப்பு வந்தது. ஐயா! இவ்வளவு பெரிய மரத்தை உங்கள் விரல் நகத்தால் வெட்ட முடியுமா? கோடாரியால் வெட்டினாலே பல நாட்கள் ஆகுமே என்று கேட்டார்.

அதற்கு துறவி நீங்கள் தினமும் ஒருபிடி அரிசியை தானம் செய்துவிட்டு சொர்க்கத்திற்கு செல்ல ஆசைப்படும்போது, என் விரல் நகத்தால் இந்த பெரிய மரத்தை வெட்டமுடியாதா? என்று கேட்டார். உடனே அந்த பணக்காரன் துறவியிடம் தன்னை மன்னிக்கும்படி வேண்டினார். மேலும் இன்றுமுதல் ஏழை எளிய மக்களுக்கு வாரி வாரி வழங்கி சொர்க்கத்தை அடைவேன் என்று துறவியை வணங்கிவிட்டு புறப்பட்டுச் சென்றார்.

*நல்லது நடக்கும் என நம்பு. தீயதை எதிர்கொள்ளத் தயாராய் இரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாகம் நீலியம்பனைப் பிள்ளையார் கோயில் தல வரலாறு

*– திரு சண்முகலிங்கம் சஜீலன்* அவர்கள் –

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் மல்லாகம் தெற்கு (J/212) கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள ஆலயமே நீலியம்பனைப் பிள்ளையார் ஆலயமாகும். பல மக்கட் பிரிவினரும் சைவத்தமிழ் அறிஞர்களும் வாழும் மல்லாகத்தில் நெல் வயல்கள் சூழ்ந்த மருத நிலத்தில் வடக்கே சிவஞான வைரவர் ஆலயம், கிழக்கே பத்திரகாளியம்மன் ஆலயம், முதலியம்மன் ஆலயம், தென்கிழக்கே வீரபத்திரர் ஆலயம், மேற்கில் பெரியநாயகித்தாயார் சமேத பெரிய தம்பிரான் ஆலயம் போன்ற பல சைவாலயங்கள் சூழ ஆலமரச் சோலைகளுக்கு நடுவே வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார் நீலியம்பனைப் பிள்ளையார். இப் பிள்ளையார் ஆலயம் சுமார் 350 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமை உடையது. அக்காலத்தில் குளத்தை அண்மித்துள்ள பகுதியில் நீலி என்னும் பெயருடைய மருத்துவ மூலிகைச் செடிகள் அதிகமாகக் காணப்பட்டமையால் இப் பிரதேசத்திற்கு நீலியம்பனை என்ற பெயர் ஏற்பட்டது என இப் பிரதேசத்தவர் கூறுகின்றனர். நீலி என்ற வயதான அம்மையார் ஒருவர் பனை மரத்துக்குக்கீழ் விநாயகரை வைத்து பூசித்து வந்த தாகவும் அதனால் நீலியம்பனை என்ற பெயர் ஏற்பட்டதாகவும் ஒரு கர்ணபரம்பரைக் கதை கூறுகிறது. ஆலயத்தை அண்மித்துள்ள தென்கிழக்குப் பகுதியில் திருக்குளமும் காணப் படுவதால் குளக்கரைப்பிள்ளையார் எனவும் இவ் விநாயகர் அழைக்கப்பட்டு வருகிறார்.

18ஆம் நூற்றாண்டுகளுக்கு முந்திய ஆண்டுகளில் குளத்திற்கு அருகாமையில் உள்ள ஒரு மரத்தடியில் இவ்விடத்தை பூர்வீகமாகக் கொண்ட மக்கள் பலர் இணைந்து விநாயகருக்கென ஒரு உறைவிடம் அமைத்து வழிபட்டு வந்தனர். அதன் பின்னர் காலம் செல்லச் செல்ல 1850ஆம் ஆண்டளவில் நீலியம்பனையூரைச் சேர்ந்த இராமலிங்கம் பொன்னு என்ற அம்மையார் ஒரு பூவரச மரத்திற்குக்கீழ் விநாயகப்பெருமானுக்கு சிறிய ஆலயம் அமைத்து தினமும் பூசை வழிபாடுகள் செய்து வந்தார். இதன்பின் இவரது மகனான இராமலிங்கம் சிந்தாமணி என்பவர் ஆலய நிர்வாகத்தினை ஊரவர்களுடன் இணைந்து திறம்பட நடத்தி வந்தார். இக் காலத்தில் இவ்வூரைச் சேர்ந்த பல சைவ அன்பர்களும் ஆலயத்திற்கென தமது காணிகளை அன்பளிப்புச் செய்தனர். சிந்தாமணி அவர்களும் தமது காணியினை ஆலயத்திற்கு வழங்கியதுடன் திருப்பணிகளையும் முன்னின்று செய்வித்தார். இதன்போது மண்டபங்கள் ஆகம விதிகளுக்கமைய கட்டப்பட்டதுடன் ஸ்தம்ப மண்டபம், கொடிமரம் ஆகியனவும் நிறுவப்பட்டன. 1946ஆம் ஆண்டு வசந்தமண்டபம்

*உன்னிடம் உறுதியான தைரியமிருப்பின் வாய்மையும் இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்டது. 1950ஆம் ஆண்டு தேர்த் திருப்பணி வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டு நிறை வேற்றப்பட்டன. இக் காலப்பகுதியில் ஆலயப்பணியில் ஈடுபாடுடையவர்களின் உறுதுணை யுடனும் ஊர்மக்களின் உதவி ஒத்தாசைகளுடனும் ஆலயம் படிப்படியாக வளர்ச்சியடைந்தது. 1940ஆம் ஆண்டுகளிலும் 1960ஆம் ஆண்டுகளிலும் மகா கும்பாபிஷேகங்கள் நடைபெற்றன.

அதன் பின்னர் 1962ஆம் ஆண்டிலிருந்து 1970ஆம் ஆண்டுவரை சி. சொக்கநாதன் அவர்கள் ஆலய நிர்வாகத்தை பொறுப்பேற்று ஊர்மக்களின் உதவியுடன் திறம்பட நடாத்தி வந்தார். 1970இலிருந்து க. சிவதொண்டன் அவர்கள் தலைமையில் நிர்வாகசபை அமைந்த துடன் நீலியம்பனை வாழ் அடியவர்களும் பலர் நிர்வாகசபையில் பல்வேறு பொறுப்புக்களை வகித்தனர். இக்காலப்பகுதியில் திருப்பணி வேலைகள் பலவும் இடம்பெற்றன. புற்தரையாக இருந்த ஆலயத்தின் தெற்குப்புற உள்வீதி சீமெந்து போடப்பட்டு கற்தரையாக மாற்றப்பட்டது. உள்வீதியில் கற்றூண்கள் நிறுவப்பட்டு அதனை ஆதாரமாகக் கொண்ட சுற்றுக் கொட்டகை அமைப்பு ஓட்டினால் வேயப்பட்டதாக அமைக்கப்பட்டது. உள்வீதி திருப்பணி வேலைகள் நிறைவுபெற்றதைத் தொடர்ந்து 01.05.1980ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. புதிய மூலமூர்த்தி பிரதிஷ்டையும் இதன்போது இடம்பெற்றது. இதன் பின்னர் பூஜை வழிபாடுகள் கிரமமாக நடைபெற்றதுடன் முன்னர் இடம்பெற்ற திருவாதவூரடிகள் புராணபடனம் மார்கழி திருவெம்பாவைக் காலத்திலும் இடம்பெற்றது. மக்களும் மிக ஆர்வத்துடன் புராணபடனத்தினைக் கேட்டு அனுபவித்தனர்.

1992ஆம் ஆண்டு இ. கதிர்காமலிங்கம் என்பவர் பொதுக்கூட்டத்தின் மூலம் நிர்வாக சபைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டு ஆலய நிர்வாகம் செயற்படுத்தப்பட்டது. இக் காலப்பகுதியில் 1995ஆம் ஆண்டு யுத்த சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட வலிகாமம் இடம் பெயர்வினால் மக்கள் ஆலய சூழலைவிட்டு இடம்பெயர்ந்தனர். இதனால் ஆலயம் பரா மரிப்பாரின்றி சேதமுற்று காணப்பட்டது. அதன் பின்னர் 1996ஆம் ஆண்டிற்குப்பின் மக்கள் படிப்படியாக மீளக்குடியமர்ந்ததுடன் ஆலயப் பாதிப்புக்கள் சிறிது சிறிதாக சீர்செய்யப்பட்டன. பின்னர் திருப்பணி வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன. உள்வீதியின் மேற்கு, வடக்கு நிலப்பகுதிகள் சீமெந்து போடப்பட்டு கற்தரையாக மாற்றப்பட்டன. பழைய வசந்த மண்டபம் அகற்றப்பட்டு புதிதாகக் கட்டப்பட்டது. இதனுடன் மேலும் பல திருப்பணி வேலைகள் நிறைவுபெற்று 31.03.1999இல் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

2002ஆம் ஆண்டு கு. கந்தசாமி அவர்கள் தலைமையில் நிர்வாகசபை அமைந்தது. இக் காலப்பகுதியில் ஆலயப் பணிகள் எவ்வித இடையூறுமின்றி தொடர்ச்சியாக இடம்பெற்றன. இக் காலத்தில் ஆலய மேற்கு வீதியில் அன்னதான மடம் கட்டப்பட்டு உற்சவ காலங்களில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் பணி இடம்பெற்று வருகிறது. அன்னதானமடத் திருப்பணிக்கு நீலியம்பனைப் பிள்ளையார் கோவில் வழிபாட்டாளர்கள் வேண்டிய நிதியுதவியை வழங்கியிருந்தனர். அதன் பின்னர் 2005ஆம் ஆண்டு 08ஆம் மாதம் ஆலய தேர்முட்டி கட்டிடம் கட்டப்பட்டது. அத்துடன் 05.08.2005ஆம் ஆண்டு புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டமும் நடைபெற்றது. ஆலய பூசகர் வதிகின்ற இல்லமும் பணம் கொடுத்து வாங்கப்பட்டு

*நம்பிக்கை உள்ளவனிடம் அளவிட முடியாத திருப்தி இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திற்கு உரித்தாக்கப்பட்டது. பின்னர் 2011ஆம் ஆண்டு இ. சிவரூபன் தலைமையில் செயலாளர், பொருளாளர், நிர்வாகசபை உறுப்பினர்களுடன் நிர்வாகம் செயற்படுத்தப்பட்டது. இக் காலத்தில் வடக்கு வெளிவீதி எல்லை மதில் கட்டப்பட்டது. 04.11.2011ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பழைமையான கர்ப்பக்கிரகம் அர்த்த மண்டபம் மகாமண்டபம் என்பன அகற்றப்பட்டு ஆலய விதிகளுக் கமைவாக புதிதாகக் கட்டப்பட்டது. சண்டேஸ்வரர், வைரவர், பஞ்சமுக விநாயகர் ஆகியோருக் கென மண்டபம் கட்டப்பட்டது. மூலஸ்தான மேல் விமானம் மூன்று தளமுடையதாக புனரமைக்கப்பட்டதுடன் புராண இதிகாசக்கதைகளுக்கேற்ற வகையில் அமைந்த காட்சிகள் சிற்பங்களாக பதிக்கப்பட்டன. சண்டேஸ்வரர், வைரவர் ஆலயங்களும் பஞ்சமுக விநாய கருக்கான தெற்கு வாயில் பிரகாரமும் கலையழகு மிக்கதாக அளவுப்பிரமானத்துடன் கட்டப்பட்டன. மூலஸ்தானம் அர்த்தமண்டபம் ஆகியவற்றின் தரைகளும் வைரவர் பஞ்சமுக விநாயகர் ஆகியோரின் தரைகளும் கருங்கல்லினால் பதிக்கப்பட்டன. இவ்வாறாக இத் திருப்பணி வேலைகள் நிறைவு பெற்றதும் 21.06.2013ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

தற்போது இ. சிவரூபன் தலைவராகவும், ந. ஆனந்தகுமார் செயலாளராகவும், க. திருக்குமார் பொருளாளராகவும் அமைந்த நிர்வாகசபை ஏனைய உறுப்பினர்களின் ஆதர வுடனும் நீலியம்பனை வாழ் மக்களின் உதவி ஒத்துழைப்புக்களுடனும் செயற்பட்டு வருகிறது. இக் காலப்பகுதியில் தற்போது கஜலட்சுமி, சந்தான கோபாலர், வள்ளி, தேவசேனா சமேத முருகன் ஆகியோருக்குத் தனித்தனிப் பரிவார ஆலயங்கள் கட்டப்பட்டு மூர்த்திப் பிரதிஷ்டை இடம்பெற்று மூன்று ஆலயங்களுக்குமான கும்பாபிஷேகம் 24.08.2022ஆம் ஆண்டு ஒரே நாளில் நடைபெற்றது. அதன் பின்னர் சிவகாமி அம்பிகா சமேத நடராஜருக்கு தனி பிரகாரக் கோயில் அமைக்கப்பட்டு 19.06.2023இல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. தற்போது 15.09.2023இல் பஞ்சதள இராஜகோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு திருப்பணி வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

தற்போதைய ஆலய அமைப்பில் மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், நிருத்த மண்டபம், ஸ்தம்ப மண்டபம், முன் மண்டபம், வசந்த மண்டபம், மணிக்கோபுரம், யாகசாலை, மடப்பள்ளி, களஞ்சிய அறை, வாகனசாலை, அலுவலகம் ஆகிய அமைப்புக் களுண்டு. அன்னதான மண்டபம், பொங்கல் மண்டபம் ஆகியனவும் கட்டப்பட்டுள்ளன. மூல மூர்த்தியாக விநாயகர் வீற்றிருந்து அருளுகிறார். கஜலட்சுமி, சந்தான கோபாலர், வள்ளி தேவசேனா சமேத முருகன், நடராஜர், வைரவர், ஸ்தம்ப விநாயகர் ஆகிய பரிவார மூர்த்திகளும் நந்தி, மூஷிகம் பலிபீடம் ஆகியனவும் உண்டு.

ஆலயத்தில் மூன்றுநேரப் பூசைகள் நடைபெற்று வருவதுடன் நித்திய, நைமித்திய விழாக்களும் நடைபெறுகின்றன. விசேட உற்சவங்களாக சித்திரை வருடப்பிறப்பு, சித்திரா பூரணை, ஆனி உத்தரம், திருக்கார்த்திகை, மாதாந்த சதுர்த்தி, ஆவணி சதுர்த்தி, நவராத்திரி, பிள்ளையார் பெருங்கதை, திருவெம்பாவை, தைப்பொங்கல், தைப்பூசம், மாசிமகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாசிவராத்திரி ஆகியவை அமைகின்றன. ஆவணி மாத பூரணையை இறுதி தீர்த்த தினமாகக் கொண்டு 12 நாட்கள் மகோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. கொடியேற்றம், தேர், தீர்த்தம் என்பன மிகச் சிறப்பான விழாக்களாக அமைகின்றன. பூங்காவன உற்சவமும் சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. வில்வமரம் ஆலயத் தல விருட்சமாக உள்ளது.

1994ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட நீலியம்பனைப் பிள்ளையார் கோவில் தொண்டர் சபை சமய, சமூகப் பணிகளை மிகச் சிறப்பாக ஆற்றி வருகிறது. மல்லாகம் நீலியம்பனைப் பிள்ளையார் தேவஸ்தான அறநெறிப்பாடசாலை 2001ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது. சிறார்களுக்கான சமயபாட போதனைகள், பரீட்சைகள், போட்டிகள் என்பவற்றினை நடத்தி வருவதுடன் பரிசளிப்பு விழாக்கள், கலை நிகழ்வுகளையும் நடத்தி வருகிறது. நீலியம்பனைப் பிள்ளையார் மேல் பக்திகொண்ட அறிஞர் புலவர்களால் காலத்திற்குக் காலம் பாடப்பட்ட பல பிரபந்தங்களும் பக்திப் பாமாலைகளும் உள்ளன. இவற்றில் நம. சிவப்பிரகாசம் அவர்களால் இயற்றப்பட்ட நீலியம்பனைப் பிள்ளையார் திருப் பொன்னூஞ்சல், அளவை அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவரால் (1923 - 2005) இயற்றப்பட்ட நீலியம்பனைப் பிள்ளையார் திருப்பதிகம், துரை. கணேசமூர்த்தி அவர்களால் இயற்றப்பட்ட இசைப் பாமாலை என்பன குறிப்பிடத்தக்கன. இசைப்பாமாலை இறுவெட்டாகவும் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஆலய நிர்வாகசபை தொண்டர் சபை மற்றும் நீலியம்பனை வாழ் மக்களின் பங்களிப்புடன் ஆலயம் மென்மேலும் வளர்ச்சியடைந்து செல்கிறது.

---

## துறவியின் அன்பு

*ஒரு கோவில் மண்டபத்தில் ஆன்மீகச் சொற்பொழிவாற்றிக்கொண்டிருந்த துறவியின் பேச்சுப் பிடிக்காமல் ஒருவன் ஒரு கல்லை அவர்மீது வீசினான். அக்கல் துறவியின் தலையில் பட்டுக் காயத்தை ஏற்படுத்தியது. துறவியின் துன்பத்தை கண்ட மற்ற பக்தர்கள் எழுந்து ஓடி அந்த இளைஞனைப் பிடித்துத் தாக்கத் துவங்கினர்.*

*அதைக் கண்ட துறவி, அவனை அடிக்க வேண்டாம். அவனைத் தன்னிடம் அழைத்து வருமாறும் சைகை செய்தார்.*

*அவரது சொற்களுக்கு இணங்கிய பக்தர்கள், இளைஞனை மேடைக்கு இழுத்துச் சென்றார்கள். பயத்தோடு நின்ற அவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே துறவி, அருகில் வைக்கப்பட்டிருந்த தட்டிலிருந்த மாம்பழம் ஒன்றை எடுத்து அவனிடம் நீட்டினார். அவனைத் தண்டிக்காமல் அவனுக்கு பழம் தருகிறீர்களே சுவாமி என்று பக்தர்கள் கூச்சலிட்டார்கள்.*

*அவர்களை அமைதிப்படுத்திய துறவி, கூட்டத்தினரைப் பார்த்துக் கூறினார், ஓரறிவு உடைய மரமானது தன்மீது கல் எறிபவனுக்கு பழத்தைத் தருகிறது. ஆறறிவு உடைய நான் எனக்குத் துன்பம் செய்தவனுக்கு ஏதேனும் நன்மை செய்யவேண்டாமா?*

*துறவி கூறியதைக் கேட்டவுடன் அவர் பாதங்களில் தடால் என்று விழுந்து அழுதான் அந்த இளைஞன்.*

*வேகமாக முடிவெடுப்பதைவிட விவேகமாக முடிவு செய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனைப் பக்திபூர்வமாக வழிபட்டால் நல்லவண்ணம் வாழலாம், இறைவனடி சேரலாம்

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

"அன்பே சிவம்" என்று கூறப்படுகின்ற சிவனை பக்திபூர்வமாக வழிபட்டால் நல்ல வண்ணம் வாழலாம். இறைவனடி சேரலாம் என்று புராணங்களும் வேதங்களும் பறை சாற்றுகின்றன. ஆகவே அரிய பிறவியை எடுத்த மானுடர்கள் நாம் தினமும் ஆலயம் சென்று வழிபடவேண்டும். தன்னை அன்பாக வழிபடும் மானிடர்கள் குறை நீக்கி, நல்லருள் புரிய ஆலயங்களில் இறைவன் வீற்றிருக்கின்றார்.

எமது சிவன் எப்படிப்பட்டவரென்று ஐம்பெருங் குரவராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் "என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் வல்லவர், எல்லாம் அறிபவர்" என்ற பெருமைகளைக் கூறியுள்ளார். கைலாயக் காட்சியைக் கண்ட திருநாவுக்கரசு நாயனார் கைலைத் திருத்தாண்டகத்தில் "மூவாய் பிறவாய் இறைவாய் போற்றி, முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி" என்று அருளியுள்ளார். தன்னை வழிபடுகின்ற அடியவர்களுக்கு பல வடிவங்களில் தோன்றி அருள் புரிந்துள்ளார் என்று புராணங்கள் கூறுகின்றன. படைத்த உயிரினங்கள் விலங்குகளுக்கும் தாயை இழந்த பன்றிக் குட்டிகளுக்கு தாயாகப் பால் ஊட்டி உள்ளார். செட்டிச்சி அம்மையார் மகளின் பிரசவத்திற்கு தாயாக நின்று அருள்புரிந்தார். தில்லைச் சிவனில் பக்திபூர்வமான திருநாளைப் போவார், நந்தனையும் தன்னுடன் அழைக்க தில்லைவாழ் அந்தணர்களுக்கு தில்லையின் தெற்கு வாசலில் தீமூட்டும்படி பணித்து தெற்கு வாசல் தீயினூடாக வரவழைத்து தன்னுடன் சேர்த்துக்கொண்டார்.

அதுமட்டுமன்றி நந்தன் வழிபட கோவில் நந்தியையும் விலகச் செய்தால் பாம்பு கடித்து இறந்த அப்பூதியடிகள் மூத்த திருநாவுக்கரசை அப்பர்மூலம் உயிர்பெறச் செய்தார். பாண்டியன் வெப்புநோயை திருஞானசம்பந்தர்மூலம் குணமடையச் செய்தார். எனவே சிவன் பக்திபூர்வமாக வழிபடும் மானுடர்கள் குறைகளை நீக்கியுள்ளார் என்பதை புராணங்கள் கூற அடியார்கள் அறிகிறார்கள்.

இலங்கை வடபகுதி ஒட்டுசுட்டானில் கல்மாடு புல் தின்று, சாணி போட்டதை ஒல்லாந்துப் பிரதானி கண்டு, தீரபுத்திரன் பூசகரிடம் மன்னிப்புக்கேட்டு, கோயிலை புனருத்தாரணம் செய்ய பணம் வழங்கினான் என்ற சம்பவத்தை யாரும் மறக்கவோ, மறுக் கவோ மாட்டார்கள். ஒல்லாந்துப் பிரதானி அதன்பின் சைவக்கோவில்களை இடிப்பதை நிறுத்திவிட்டான். ஒட்டுசுட்டான் ஈஸ்வரன் அருள் எங்கும் பரவ, மக்கள் கூட்டம் ஈஸ்வரனை வழிபட அலை அலையாகச் சென்றனர். பக்திபூர்வமாக வழிபட்டு பூசை செய்தவர் புகழும் எங்கும் பரவியது. மனைவியை இழந்து யாழ்ப்பாணம் அச்சுவேலி இடைக்காடு கொத்தவளவில் இருந்து இரண்டு பிள்ளைகளுடன் ஒட்டுசுட்டானில் குடியேறி, ஈஸ்வரனுக்குப் பூசை செய்யத்

*உனது குணம் சரியாக இருந்தால் உனது புகழும் சரியாக இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பட்டு இறையருள் பெற்று நலமாக வாழ்ந்தார். இறையருள் பெற்ற ஒரு பெண்மணி இடைக்காட்டில் ஐந்தாம் நூற்றாண்டளவில் கணவன் இரு பிள்ளைகளை தோட்டம் அனுப்பிவிட்டு பலாப்பழம் பழுத்ததும், கைக்குழந்தையையும் ஏணையில் தூங்கவிட்டு காலையில் முருகன் அருளினால் கதிர்காமஞ் சென்று பலாப்பழம் படைத்து திரும்பவும் மத்தியானமளவில் வீடு திரும்பி, இவளைத் தேடிய கணவன் முன் விபூதிச் சரையுடனும் படைத்த பலாப்பழத் துண்டுடன் அவர் வீட்டருகில் இறங்கி ஊர்மக்கள் முன் தோன்றினாள். இவளின் நிலையைக் கண்ட கணவன் ஊர்மக்கள் அவளிடம் நிகழ்ந்ததைக் கேட்டு அதிர்ச்சியும் ஆனந்தமும் அடைந்தார்கள். பக்திபூர்வமாக இறைவனை விரதங்கள்மூலம் வழிபட்டு வருபவர்களுக்கு உணவும் அளித்து வந்ததினால் நல்ல வண்ணமும் வாழ்ந்தாள் என்பதை இடைக்காடு புவனேஸ்வரி அம்மன் கோவில் நூல்வெளியீட்டில் பிரசுரித்துள்ளார்கள். இறைபக்தி வழிபாட்டால் நல்லவண்ணம் வாழ்ந்தாள் என்பதை இடைக்காட்டு மக்கள் நன்கு அறிவர்.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியானும் பக்திபூர்வமாக வழிபடும் அடியவர்களுக்கு அருள் புரிந்துள்ளார். பருத்தித்துறை அடியவன் முருகேசு மாறாத நோயால் வாடி வதங்கி செல்வச்சந்நிதியானை தஞ்சமெனக்கொண்டு ஆலயத்தில் தங்கியிருந்து வழிபட நோய் குணமடைந்தது. அதன்பின் பல ஆண்டுகள் இங்கு இருந்து தொண்டுகள் செய்து முருகேசு சுவாமியார் என்னும் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். செல்வச்சந்நிதியான் பிள்ளை இல்லாதவர்களுக்கு பிள்ளைப் பாக்கியத்தையும், வறுமையினால் வாடிய மக்களுக்கு பொருள் பெருக அருள் புரிந்துள்ளார். நிம்மதியில்லாது வாழ்ந்த மக்கள் சந்நிதியான் ஆற்றில் மூழ்கி, விபூதி தரித்து பலமுறை வலம்வந்து சந்நிதியான் ஆச்சிரம அமுதுண்டு நிம்மதி அடைந்ததை நாம் அறிவோம். கடற்கரையான் ஆலயத்தில் ஒரு பெண் நோய்வாய்ப்பட்டு ஆலயத்தில் தொண்டு செய்து முருகனுக்கு பெரு மணியடிப்பதையும் இன்றும் நாங்கள் காண்கிறோம்.

இறைவனை நல்ல மனப்பூர்வமாக மானுடராகிய நாங்கள் வழிபட்டால் நல்லவண்ணம் வாழ்வதுடன், அவன் அடியும் சேரலாம் என்பது உண்மையில் உண்மை. எனவே மானுடராகிய நாம் தினமும் செல்வச்சந்நிதி சென்று வழிபட்டு நல்லவண்ணம் வாழ வழியைத் தேடிக் கொள்வோம். முருகனை மறவாது என்றும் போற்றுவோமாக.

## கல்வியால் அறிவூட்டி அருள்வாயே முருகா

போகவிட்டுப் புறம் சொல்வார்கள் பலர்
பொய்களவு சூது கொள்வார்கள் சிலர் - இவை
வேகமாக எங்கும் பரவி நிலைக்குதே முருகா
வெற்றி வேலனே வந்து தடுத்தாட் கொள்வாயே
நீதியற்ற வார்த்தை யாலங்கள் பற்பல
நிம்மதி குலைக்கும் ஏமாற்று வித்தைகள்
வீதி எங்கும் நடக்கும் வழிப்பறிகள் யாவும்
விட்டகலக் கல்வி அறிவூட்டி அருள்வாயே முருகா

- சின்னப்பு தனபாலசிங்கம் -

*உன்னதமான ஒவ்வொரு வேலையும் முதலில் முடிந்ததாகவே தோன்றும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத வாராந்த நிகழ்வுகள்

**05.04.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "பக்தி கானம்"

வழங்குபவர்கள் :- யாழ் சன் இசைக் குழுவினர்கள்

---

**12.04.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

**19.04.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "மகாபாரதம்" (தொடர்)

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

[ஆசிரியர்]

---

**26.04.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் சித்திரை மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு க. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள்

[இளைப்பாறிய கிராம சேவகர்]

மதிப்பீட்டுரை :- திரு சோ. தேவராஜா அவர்கள்

[சிரேஷ்ட சட்டத்தரணியும், பதில் நீதிவானும்]

**317ஆவது மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org